விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை 04 | சனிக்கிழமை (19.11.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 335

ராம்கோ
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்படுவது
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமெந்து

# பிரதமர் மகிந்த ஜனாதிபதியானார்



## இன்று பதவியேற்பு நிகழ்வு

(நமது நிருபர்)

**இலங்கையின் ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டார்.**

**இதனை தேர்தல் ஆணையாளர் திஸாநாயக்க அறிவித்தார். புதிய ஜனாதிபதி இன்று உத்தியோகபூர்வமாக பிரதம நீதியரசர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்கிறார்.**

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒரு லட்சத்து 86 ஆயிரத்து 327 வாக்குகளால் தோல்வியடைந்தார்.**

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற வேட்பாளரை அறிவிக்கும் நிகழ்வு நேற்றுப் பிற்பகல் 1.40 மணிக்கு தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்றதாக தேர்தல் ஆணையாளர் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராகப் போட்டியிட்ட பிரதான வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்க ஒரு லட்சத்து 86 ஆயிரத்து 327 வாக்குகளால் தோல்வியடைந்தார்.

மகிந்த ராஜபக்ஷவின் மொத்த வாக்குகளாக 48 இலட்சத்து 80 ஆயிரத்து 950 வாக்குகளையும்; ரணில் விக்கிரமசிங்க 46 இலட்சத்து 94 ஆயிரத்து 623 வாக்குகளையும் பெற்றனர்.

இதேவேளை மகிந்த ராஜபக்ஷவும்; எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் தலா 11 மாவட்டங்களில் வெற்றிபெற்றுள்ளனர். அம்பாந்தோட்டை, பொலநறுவை, அநுராதபுரம், மொனராகலை, இரத்தினபுரி, காலி, மாத்தறை, களுத்துறை, குருணாகல், கேகாலை மற்றும் கம்பஹா (12 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பேன்

### புதிய ஜனாதிபதி மகிந்த உறுதி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கௌரவமான சமாதானத்தை ஏற்படுத்தப்போவதாக புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட அவர் தேர்தல்கள் செயலகத்தில் வைத்து செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

மகிந்தவின் சிந்தனையில் உள்ளவற்றை நடைமுறைப்படுத்துவதே எனது ஒரே நோக்கமாகும். இதனைப் பயன்படுத்தி நாட்டை புதியதோர் பாதையினை நோக்கி இட்டுச் செல்லவுள்ளேன். இந்த வெற்றியினை புதிய மக்கள் யுகம் ஒன்றினை உருவாக்கும் முற்போக்குவாத மக்களின் வெற்றியாகவே நான் கருதுகிறேன். (12 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய ஜனாதிபதி எமக்கு அழைப்புவிடுத்தால் சமாதான முயற்சிகளில் இணையத் தயார்!

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை ஏற்றுக்கொண்டு அழைப்புவிடுத்தால் சமாதான செயற்பாடுகளை முன்னெடுத்துச்செல்ல ஒத்துழைப்பு வழங்கத் தயாரென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின் போது வடக்குக் கிழக்கில் உள்ள பெரும்பாலான வாக்காளர்களுக்கு வாக்களிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையெனவும், தேர்தல் ஆணையாளர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி மீண்டும் தேர்தலை நடத்துமாறு ரணில் கேட்டுள்ளார்.

இதன் காரணமாக ஜனாதிபதித் தேர்தலின்போது நாட்டில் உள்ள ஒட்டுமொத்த மக்களின் முடிவு வெளியிடப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். கொழும்பில் நேற்று மாலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்துக்களுக்கு நன்றிகூற மகிந்த மறந்தாரா?

(கொழும்பு)

ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்ற செய்தியை தேர்தல் ஆணையாளர் நேற்றுப் பிற்பகல் 1.40 மணியளவில் உத்தியோகபூர்வமாக அறிவித்தார். இதனைத் தொடர்ந்து தேர்தல் திணைக்களத்தில் இருந்தவாறு மகிந்த ராஜபக்ஷ உரையாற்றினார்.

தேர்தலில் வெற்றிபெற்றதற்கு நன்றிகூறுவதாக அமைந்த அந்த உரையில் கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்களுக்கு நன்றி எனத் தெரிவித்த மகிந்த இந்துக்களுக்கு நன்றி கூறாதுவிட்டார். இது மறதியா? அல்லது இந்துக்கள் மீதான வெறுப்பா? என்பது போகப்போகவே தெரியவரும் என்கிறார்கள் அரசியல் அவதானிகள். (ந)

## பொலிஸ் சார்ஜன்ட் மீது நேற்று மந்திகையில் துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

மந்திகை ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் கடமையில் இருந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர் படுகாயமடைந்தார். மந்திகை ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் பாதுகாப்புக் கடமையில் இருந்த அவர் நேற்று மதியம் அருகில் இருந்த கடையொன்றிற்குச் சென்றுவிட்டுத் திரும்பும் வழியிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்ட தேர்தல் முடிவு

ரணில் 5523 - 70.20%
மகிந்த 1967 - 25.00%
பதிவுசெய்யப்பட்டவை 7 01938
மொத்த வாக்குகள் 8524
செல்லுபடியானவை 7868; நிராகரிக்கப்பட்டவை 656

ExpoAir
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# மாவட்ட ரீதியான தேர்தல் முடிவுகள்

## நுவரெலியா

மகிந்த :-99550-27.97%
ரணில் :-250428-70.37%
செல்லுபடியானவை:-355875
நிராகரிக்கப்பட்டவை:-5410
மொத்த வாக்குகள்:-361285
பதிவு செய்யப்பட்டவை:-447225

## புத்தளம்

மகிந்த :-160686-48.14%
ரணில் :-169264-50.71%
செல்லுபடியானவை:-333783
நிராகரிக்கப்பட்டவை:-3536
மொத்த வாக்குகள்:-337319
பதிவு செய்யப்பட்டவை:-470604

## கொழும்பு

மகிந்த :-534431-47.96%
ரணில் :-569627-51.12%
செல்லுபடியானவை:-1114250
நிராகரிக்கப்பட்டவை:-12879
மொத்த வாக்குகள்:-1127129
பதிவு செய்யப்பட்டவை:-1468537

## கம்பஹா

மகிந்த :-596698-54.78%
ரணில் :-481764-44.23%
செல்லுபடியானவை:-1089277
நிராகரிக்கப்பட்டவை:-11724
மொத்த வாக்குகள்:-1101001
பதிவு செய்யப்பட்டவை:-1364180

## கண்டி

மகிந்த :-315672-44.30%
ரணில் :-387150-54.33%
செல்லுபடியானவை:-712620
நிராகரிக்கப்பட்டவை:-9817
மொத்த வாக்குகள்:-722437
பதிவு செய்யப்பட்டவை:-907038

## காலி

மகிந்த :-347233-58.41%
ரணில் :-239320-40.26%
செல்லுபடியானவை:-594468
நிராகரிக்கப்பட்டவை:-5540
மொத்த வாக்குகள்:-600008
பதிவு செய்யப்பட்டவை:-732289

## மாத்தறை

மகிந்த :-279411-61.85%
ரணில் :-165837-36.71%
செல்லுபடியானவை:-451722
நிராகரிக்கப்பட்டவை:-4077
மொத்த வாக்குகள்:-455799
பதிவு செய்யப்பட்டவை:-562987

## வன்னி

மகிந்த :-17197-20.36%
ரணில் :-65798-77.89%
செல்லுபடியானவை:-84476
நிராகரிக்கப்பட்டவை:-1398
மொத்த வாக்குகள்:-85874
பதிவு செய்யப்பட்டவை:-250386

## குருணாகல

மகிந்த :-468507-52.26%
ரணில் :-418809-46.72%
செல்லுபடியானவை:-896497
நிராகரிக்கப்பட்டவை:-8458
மொத்த வாக்குகள்:-904955
பதிவு செய்யப்பட்டவை:-1124076

## இரத்தினபுரி

மகிந்த :-294260-53.01%
ரணில் :-252838-45.55%
செல்லுபடியானவை:-555074
நிராகரிக்கப்பட்டவை:-5510
மொத்த வாக்குகள்:-560584
பதிவு செய்யப்பட்டவை:-668217

## கேகாலை

மகிந்த :-239184-51.02%
ரணில் :-223483-47.67%
செல்லுபடியானவை:-468773
நிராகரிக்கப்பட்டவை:-4795
மொத்த வாக்குகள்:-473568
பதிவு செய்யப்பட்டவை:-583282

## மகிந்தவின் அரசியல் பணி...

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ நேற்றுடன் தனது 61 வது அகவையில் கால் பதித்துள்ள அரசியல் துறையில் நீண்ட காலம் அனுபவமிக்க சிரேஷ்ட அரசியல்வாதியாவார்.

1945 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் திகதி பிறந்த ராஜபஷ்ச அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வெலியத்தை தொகுதியில் பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டி.ஏ.ராஜபக்ஷவின் புத்திரராவார்.

1970 ஆம் ஆண்டில் இடம் பெற்ற பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட மகிந்த இளவயதில் பாராளுமன்றம் சென்ற முதல் மனிதர் என்ற பெருமைக்குரியவர்.

கடந்த 35 வருட அரசியல் வாழ்க்கையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்படும் வரையிலான காலப்பகுதியில் மகிந்த ராஜபக்ஷ தனது கட்சிக்காக பாரிய அளவிலான வேலைத்திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றியுள்ளார்.

தொழிற் சங்கங்களை மீளவும் உயிரூட்டி நாட்டில் இளைஞர் யுவதிகளை இணைத்து இளைஞர் சம்மேளனம் ஒன்றையும் உருவாக்கி கட்சியைப் பலப்படுத்தினார்.

மீன்பிடி, நீரியல்வளம், தொழில் மற்றும் தொழில் பயிற்சி ஆகிய அமைச்சுப் பொறுப்புக்களை வகித்த அவர் பல துறைகளின் ஊடாக நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் சென்றார். மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சராக மீன்பிடித்துறைமுகங்களை புனர் நிர்மாணம் மற்றும் மீன்பிடி கிராமங்களை உருவாக்கும் வேலைத்திட்டங்கள் மூலம் மீனவ மக்களுக்காக வீட்டுத் திட்டங்களையும் ஏற்படுத்தி கடல் மற்றும் நீர்வளம் தொடர்பாக விஞ்ஞானக் கல்வியினை பெற்றுக் கொடுக்கும் நோக்கோடு சமுத்திரவியல் பல்கலைக்கழகம் ஒன்றையும் ஆரம்பித்தார்.

தொழில் மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சராக பதவி வகித்த காலத்தில் அவர் உருவாக்கிய தொழிற் பயிற்சி அதிகாரசபை முக்கியமானது. காலி றிச்மன் கொழும்பு நாலந்தா மற்றும் தேஸ்ரன் கல்லூரிகளில் கல்வி பயின்ற மகிந்தராஜபக்ஷ ஒரு சட்டத்தரணியும் ஆவார்.

மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் தொடர்பான பாராளுமன்ற உறுப்பினர் குழு செயலாளராக பதவி வகித்த அவர் அத்துறையிலும் பல பணிகளை ஆற்றியுள்ளார்.

2004 ஆம் ஆண்டு ஏப்பிரல் 6 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவியேற்றுக் கொண்டார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் பிரதமர் பதவியைத் தவிர்ந்த பெரும்தெருக்கள் அமைச்சராகவும் செயலாற்றி மகனஹம வேலைத்திட்டத்தின் மூலம் நாட்டின் பெருந்தெருக்கள் கட்டமைப்பை விருத்தி செய்வதற்காக அரும்பணியாற்றியுள்ளார்.

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச மாநாடுகள் பலவற்றில் கலந்து கொண்ட மகிந்த நாட்டிற்காக பல்வேறு அனுகூலங்களையும் பெற்றுக் கொடுத்துள்ளார்.

35 வருட அரசில் வாழ்க்கையைக் கொண்ட மகிந்த ராஜபக்ஷ சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினராகவும் தற்போதைய சிரேஷ்ட உப தலைவராகவும் செயற்படுகின்றார்.

(ச-4)

## பிரதமர் பதவி அநுராவுக்கு இல்லை? கட்சி வட்டாரங்கள் தகவல்

பிரதமராக அநுராபண்டார நாயக்காவை நியமிப்பதில்லை என்று புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முடிபு செய்துள்ளதாக தெரிகிறது.

ஜனாதிபதியாக இருந்து விலகும் சந்திரிகா குமாரதுங்காவின் சகோதரரான அநுரா பண்டாரநாயக்கா சுற்றுலா மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சராகவுள்ளார்.

மகிந்தராஜபக்ஷவை சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளாராக அறிவித்தபோது மகிந்த வகிக்கும் பிரதமர் பதவியை அநுரா பண்டாரநாயக்காவுக்கு வழங்க முடிபு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு அநுரா பண்டார நாயக்கா முழுமையான ஒத்துழைப்பு அளிக்கவில்லை. ஆனால் அவருக்கு பிரதமர் பதவி அளிப்பதில் அர்த்தமில்லையென்று மகிந்தவின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அநுராவுக்கு பிரதமர் பதவியைக் கொடுப்பதற்கான காரணம் எதுவும் இல்லை. என்று கொழும்பு ஊடகவியலாளர்களிடம் பேசிய வர்த்தகத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோப் புள்ளே பகிரங்கமாக அறிவித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு பாடுபடவோ அல்லது ஆதரிக்காத அவர் எப்படி பிரதமர் ஆக முடியும் என்றும் ஜெயராஜ் கேள்வி எழுப்பினார். பிரதமர் பதவிக்கு யார் நியமிக்கப்படுவார் என்று தெரிவிக்க ஜெயராஜ் பெர்ணான்டோப் புள்ளே மறுத்துவிட்டார்.

இருப்பினும் மகிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்பு நாடாளுமன்றம் கலைக்கப்படமாட்டாது என்றும் அவர் மேலும் கூறினார்.

(ச-4)

# ஏமாற்றப்பட்டு வந்த வெறுப்பின் வெளிப்பாடே வட-கிழக்கு தமிழ் மக்களின் தேர்தல் புறக்கணிப்பு

## -சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

**சிங்களத் தலைமைகளால் தமிழ்மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வந்த வெறுப்பின் வெளிப்பாடே அவர்கள் தேர்தலில் அக்கறை காட்டாததன் காரணம் என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் எப்பொழுதுமே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அக்கறையீனத்தைக் காட்டி வருகின்றார்கள்.இத்தகைய தேர்தல்களை அவர்கள் தொடர்ச்சியாக அக்கறைப் படுத்தாமல்தான் வந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஏனெனில் ஸ்ரீலங்காவுக்கான ஜனாதிபதித் தேர்தல் என்பது, ஒட்டு மொத்தமாக சிங்களப் பேரினவாதத்தின் தமிழ் மக்கள் மீதான ஒரு ஒடுக்குமுறை திணிப்பினுடைய தலைமையைத் தெரிவு செய்வதற்கான ஒரு தேர்தலாகத்தான் தமிழ் மக்களினால் பார்க்கப்பட்டு வருகின்றது எனவும் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இலண்டன் பி.பி.சி தமிழோசைக்கு அவர் வழங்கிய சிறப்பு நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த காலத்தில் எமது மக்கள் மீது சிங்கள அரசாங்கத்தினால் யுத்தம் திணிக்கப்பட்டபோது யுத்தத்தை நீக்கி, தமிழ்மக்களின் உரிமைகளை, அபிலாஷைகளை முன்னெடுப்போம் என்ற வாதங்களின் மூலம் ஜனாதி பதிகளாக சில பிரதிநிதிகள் நின்ற போது தமிழ் மக்கள் சிறிதளவாவது நம்பிக்கைகளை அடைந்திருந்ததும் உண்மை.

ஆனால் ஆட்சிப் பீடம் ஏறியவுடன் அவர்கள் நடந்துகொண்ட விதம் அனைவரும் தெரிந்ததொன்றாகும்.

ஆனால், இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக மாறி மாறி வந்த இனவாதத் தலைமைகள் எங்களது மக்களுக்கு இன்னும் இன்னும் அழிவையும் சேதங்களையும் ஏற்படுத்தினார்களே தவிர எமது மக்களுக்கான ஒரு தீர்வினை முன்வைப்பதில் அவர்கள் எந்த வொரு வழியிலும் செயற்படவில்லை.

தொடர்ந்தும் எமது மக்களை ஏமாற்றுகின்ற இழுத்தடிக்கும் போக்கைத்தான் கடைப்பிடித்தார்களே தவிர வேறு எதையும் செய்துவிடவில்லை.

தேர்தலிலே நிற்கும் போது மட்டும் தமிழர்களின் உரிமைகள் பற்றி ஒரு கோஷங்களாகவே அவர்கள் முன்வைத்தார்களே தவிர அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் வழமையான தமது சிங்கள பௌத்த இனவாதத்தை முன்வைக்கும் தலைவர்களாகத்தான் செயற்பட்டிருக்கின்றார்கள்.

அந்த வகையில், இது ஒரு ஸ்ரீலங்காவிற்கான சிங்கள மக்களுக்கான தேர்தல் ஒன்றாகவே தமிழ் மக்கள் எப்போதும் உணரும் தேர்தலாக இருந்துவருகின்றது.

தற்போதும்,இன்னும் வலுவான சிங்கள மக்களுக்கான ஒரு தேர்தலாக தமிழ் மக்கள் எண்ணியுள்ள ஒரு சூழலாகத்தான் இருக்கின்றது. பல மட்டங்களிலும் தமிழ் மக்களுக்குரிய தீர்வுகள் வழங்கப்படாது ஏமாற்றப்பட்டு வந்த வெறுப்பின் வெளிப்பாடுதான் இந்த முறை இத் தேர்தலில் தமிழ் மக்கள் அக்கறை காட்டாததற்கான காரணமாகவுள்ளது.

வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்தில் வாழும் மக்களைப் பொறுத்த வரையில் அவர்கள் நீண்ட காலமாக தங்களுடைய சுய நிர்ணய உரிமைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு போராடி வருகின்றார்கள். இன்று இங்கு ஏற்பட்டுள்ள அரசியல் இராணுவப்பலமும் தான் வந்த ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றி ஒரு இயல்பான சூழலில் எமது மக்கள் வாழ்வதற்காகப் போராடி வருகின்றார்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

அந்த வழியில் தான் வடக்கு-கிழக்கிற்கு வெளியில் வாழ்கின்ற அதாவது ஸ்ரீலங்காவில் வாழ்கின்ற எங்களது தமிழ் சகோதரர்களுக்குக்கூட இந்த அடிப்படையில் தான் அவர்களுடைய பாதுகாப்பும் இதனுடன் பின்னிப்பிணைந்துள்ளது.

இலங்கையினுடைய முழு இறையாண்மையையும் எமது மக்கள் ஏற்கவில்லை. ஏனெனில் இலங்கை சுதந்திரமடைந்ததாக சொல்லப்படும் காலத்தில் இருந்து எமது மக்கள் தங்களுக்கான உரிமைப் போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்துள்ளனர்.

தமிழர்கள் அனைத்து வழிமுறைகளிலும் தங்களது உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்து வந்துள்ளனர்.

இது இலங்கையின் அரசியல் அமைப்பை ஏற்றல்ல. பின்னாளில் இராணுவ ரீதியான வன்முறையை கட்டவிழ்த்துவிட்டு இன அழிப்பு மேற்கொள்ளப்பட்ட போது ஆயுத ரீதியாக தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிலை எமது மக்களுக்கு ஏற்பட்டது.

தற்போது சமஷ்டி என்று பலர் கூறிவந்த போதிலும் அதிலும் தெளிவான வகையில் எதனையும் சொல்லவிடவில்லை எனவும் தமிழ்ச் செல்வன் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# குறைந்தளவு தொகையினரே மட்டக்களப்பிலும் வாக்களிப்பு

(மட்டக்களப்பு)

ஜனாதிப்தித் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகக் சிறிய எண்ணிக்கையானோரே வாக்களித்துள்ளனர்.

தமிழ் மக்கள் இத் தேர்தலை புறக்கணிக்கும் நிலையில் முஸ்லிம் மக்களும் தேர்தல் வாக்களிப்பில் பெரிதாக அக்கறை காட்டவில்லை.

இதேவேளை, யுத்த சூனியப் பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள கொத்தணி வாக்குச் சாவடிகளில் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே வாக்களித்துள்ளனர்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து போக்குவரத்துச் சேவை எதுவும் நடைபெறாது முற்றாக தேக்கமடைந்திருந்தன. வாவிகளூடாக நடைபெறும் படகுச் சேவைகளும் முற்றாகத் தடைப்பட்டிருந்தன.

இதேவேளை, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் விடுவிக்கப்பட்ட பகுதிக்கும் இடையிலுள்ள சில வீதிகளில் ரயர்கள் தீ மூட்டி எரிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பகுதிகளிலும் வாக்களிப்பு மந்தமாகவே நடைபெற்றதுடன் வன்முறைச் சம்பவங்களும், மோதல்களும் இடம்பெற்றுள்ளன.

வாழைச்சேனையில் இரு வாக்களிப்பு நிலையங்கள் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. ஆனால் இதன்போது பாரியளவில் இழப்புக்கள் ஏற்படவில்லை. (ற)

# தேர்தல் புறக்கணிப்பின் எதிரொலி கொழும்பு பங்குச் சந்தை சரிவு!

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை தமிழர்கள் புறக்கணித்ததால் கொழும்பு பங்குச் சந்தை சரிவடைந்துள்ளது

அனைத்து பங்கு வர்த்தகத்தின் சுட்டெண் 41 புள்ளிகள் வீழ்ச்சியடைந்துள்ளன. இது முதல் நாள் சுட்டெண்ணுடன் ஒப்பிடுகையில் 1.65 வீதம் வீழ்ச்சியாகும். மிலங்கா பங்கு வர்த்தகத்தில் சுட்டெண் 77 புள்ளிகள் வீழ்ச்சியடைந்துள்ளன. இது 2.31 வீதமான வீழ்ச்சியாகும்.

கடந்த 10 ஆம் திகதியன்று ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் எதுவித அக்கறையும் செலுத்த வேண்டியதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அறிவித்திருந்த போதும் கொழும்பு பங்குச் சந்தை வீழ்ச்சியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)


அன்பு வாசகர்களே...

உங்கள் வலம்புரியின் ஆறாவது ஆண்டின் நிறைவில் பல பக்கங்களைக்கொண்ட

வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்

வெளிவரவுள்ளது.

கல்வி. மருத்துவம். உளவியல். சோதிடம். ஆன்மீகம். விஞ்ஞான ஆராய்ச்சிகள். வரலாறு. பொருளியல். சமூகவியல். அரசியல். கவின்கலை தொடர்பான பல்துறைசார் ஆக்கங்கள் இச்சிறப்பிதழில் இடம்பெறவுள்ளன.

துறைசார் அறிஞர்கள், எழுத்தாளர்கள், மாணவர்களிடம் இருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

உங்கள் ஆக்கங்களை

பிரதம ஆசிரியர்
வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்
வலம்புரி
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

நிறைவு விழாச் சபை, வலம்புரி




வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் தினவிழாவை பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் எஸ். கோபாலகிருஸ்ணன் மங்களவிளக்கேற்றி ஆரம்பிப்பதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இளைப்பாறிய ஆசிரியை உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-பருத்தித்துறை நிருபர்)

## இன்று ஒரு தகவல்

# இயல்புமாறலாமா?

ஒரு ஆள் இருந்தார். அவருக்கு விலங்குகள் மீது மிகவும் பிரியம். அதனால் தன் வீட்டில் ஒரு நாயை வளர்த்தார். அதே போல கழுதையையும் வளர்த்தார். அந்தக் கழுதை அவர் வீட்டுக்கெல்லைப் புறத்தில் நின்று கொண்டிருக்கும். ஏதாவது பொதி சுமக்கும் வேலை இருந்தால் அது கவனித்துக்கொள்ளும்.

அந்த நாய் வீட்டினுள் இருக்கும் நாய்க்கு அந்த வீட்டில் இராஜ உபசாரம்தான்.அதற்கு அந்த வீட்டில் ஏகப்பட்ட மரியாதை. குளிப்பதற்கு சவர்க்காரம்.இரண்டு வேளையும் பால், பிஸ்கற் மத்தியானம் சாப்பாடு... அதற்கு ஏதாவது உடல் நலமில்லாதுவிட்டால் உடனடியாக ஆஸ்பத்திரி வைத்தியம்.மிகவும் கொடுத்து வைத்த நாய்.

அந்த வீட்டுத்தலைவர் வெளியில் வாக்கிங் போனால் கூடவே இதுவும் போகும். அவர்மட்டும் தனியாக எங்கேயாவது வெளியே போய்விட்டுவந்தால்... வீட்டுக்கு வந்தவுடன் அந்த நாய் அவரிடம் ஓடிவரும்... அப்படியே எழும்பி முன்னங்கால் இரண்டையும் அவரது தோள் மீது போட்டுக் கொள்ளும்... அவர் சிரித்துக்கொண்டே அதன் தலையில் செல்லமாகத் தட்டுவார்.அவர் சாய்மனைக் கதிரையில் சாய்ந்துகொண்டு தொலைக்காட்சி பார்ப்பார். பத்திரிகை படிப்பார். அப்போதெல்லாம் அந்த நாய் அவருடைய காலடியில் படுத்துக்கொள்ளும்.அப்போது கூட அவர் நாயின் தலையைச் செல்லமாகத் தடவிக்கொடுப்பார்.அந்த நாய் படுப்பதற்கென்றே ஒரு மெத்தை சில சமயம் அது அங்கே இருக்கும். மேசை நாற்காலியின் மீது கூட ஏறி விளையாடும். சோபாவில் ஏறி உட்கார்ந்துகொள்ளும்.இவ்வளவு செல்வாக்காக வளர்ந்தது அந்த நாய்.

இதையெல்லாம் அந்தக் கழுதை பார்த்தது. யோசிக்க ஆரம்பித்தது. என்ன இது... இந்த வீட்டில் நாம் கழுதையாக உழைக்கிறோம்.பொதி சுமக்கிறோம்... நமக்கு ஒரு நல்ல சாப்பாடு கிடையாது. படுக்கை கிடையாது. ஒரு நாளாவது நமது தலையையோ முதுகையோ தடவிக் கொடுத்தது கிடையாது. ஆனால் அந்த நாய் இந்த வீட்டுக்காக ஒரு துரும்பைக் கூட அசைத்தது இல்லை... அதைப் போய் இந்த வீட்டிலுள்ளவர்கள் இப்படித் தலையில் வைத்துத் தாங்குகிறார்களே... என்று யோசித்தது.

மிகவும் நீண்டநேரம் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தது. "சரி... இனிமேல் நாமும் அந்த நாய் மாதிரியே நடந்துகொள்வோம். அப்போதாவது நமக்கும் அந்த மரியாதை கிடைக்கிறதா என்று பார்க்கலாம் என மனத்திற்குள் ஒரு திட்டம் போட்டது. உடனே அந்தத்திட்டத்தை செயல்படுத்தவும் ஆரம்பித்தது. அதாவது அந்த வீட்டில் அந்த நாய் என்னென்ன செய்கிறதோ அவற்றையெல்லாம் இதுவும் செய்ய ஆரம்பித்தது. அந்த வீட்டு எஜமான் எங்கேயோ வெளியில் சுற்றிவிட்டு மிகவும் அசந்துபோய் வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான்.உடனே இந்தக் கழுதை அவனிடம் ஓடியது... அந்த நாய் என்ன செய்யுமோ அதுபோலவே செய்தது. அதாவது அந்த ஆளின் தோள் மீது தனது முன்னங் கால் இரண்டையும் தூக்கிப் போட்டது.

அந்த ஆள் பயந்துபோய்விட்டான்.அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. இது ஏன் இப்படிச் செய்கிறது என்று.கொஞ்சம் ஒதுங்கி நின்றான்.இது அவனைச் சுற்றிச் சுற்றி வந்தது. நாய் மாதிரி வாலை ஆட்டிக்கொண்டே. அவன் 'கிடுகிடுவென்று' வீட்டுக்குள் போனான். இதுவும் பின்னாலேயே ஓடியது. அங்கே போய் நாய் மாதிரியே மேசை கதிரைகளில் ஏறிக்குதித்து விளையாடியது. சோபாவில் உட்கார்ந்தது. மேசையிலிருந்த சாமான்களெல்லாம் கீழே விழுந்து உடைந்தது. கழுதை மேசை மீது ஏறிக்குதித்தால் என்னத்திற்கு ஆகும்?

அந்த ஆள் பார்த்தான் சரி... இந்தக் கழுதைக்கு என்னமோ ஆகிவிட்டது என்று முடிவு செய்தான். ஒரு நல்ல கயிறாகப் பார்த்து கொண்டுவந்தான். அதன் காலிலும் கழுத்திலும் கட்டினான். தரதரவென்று இழுத்துக்கொண்டு போனான். அடித்து... கொல்லைப் புறத்தில் கட்டிப்போட்டு விட்டான். அன்ன ஆகாரம் எதுவும் கொடுக்காமல் பட்டினி போட்டு விட்டான். இப்போது அந்தக் கழுதை யோசிக்கிறது. என்ன இது? நமது எஜமானுக்கு இன்று என்ன ஆயிற்று? அந்த நாய் பழகுவது போலத்தானே நானும் பழகினேன். ஆனால் இந்த மனிதன் நாயை அடிக்கவில்லை... என்னை அடிக்கிறான். இப்படிக் கொண்டுவந்து கட்டிப் போட்டுவிட்டானே என்ன காரணமாக இருக்கும்? என்று யோசிக்க ஆரம்பித்துவிட்டது.

எதற்கு இந்தக் கதை என்றால் இதுபோலவே நாமும் சில சமயம் யோசிப்பது உண்டு. நமது இயல்பு மாறி நடக்க ஆரம்பித்துவிட்டால் பல சமயங்களில் இப்படி யோசிக்கும் படிதான் ஆகிவிடும். அதனால் ஒரு மனிதன் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அப்படி நடந்துகொண்டால் தான் நமக்கு மரியாதை! வெறி நாய் கடித்துவிட்டால் மனிதனும் அதேபோல் ஆகிவிடுகிறான். பார்த்தீர்களா? அவனது இயல்பு மாறிவிடுகிறது.

ஒருவனைப் பார்த்து இன்னொருவன் கேட்டானாம். "வெறி நாய் ஒன்று உன்னைக் கடித்துவிட்டால் நீ என்ன செய்வாய்?" என்று. "நான் உடனே பேப்பரும் பேனாவும் கேட்பேன்"என்றானாம் அவன். "ஏன் உயில் எழுதுவதற்கா?" என்று கேட்டிருக்கிறான். "இல்லை நான் யார் யாரையெல்லாம் கடிக்க வேண்டுமென்று அட்டவணை தயாரிப்பதற்கு" என்றானாம் அவன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புலிகளிடமிருந்து சிங்களத் தலைவர்கள் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்

-தீப்தி குமார குணரட்ண

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணித்து நிரூபித்துள்ளதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து ஸ்ரீலங்கா அரசியல் தலைவர்கள் பாடம் கற்க வேண்டும் என்று ஸ்ரீலங்காவின் அரசியல் நோக்கர் தீப்தி குமார குணரட்ண கருத்துத்தெரிவித்துள்ளார்.

தமிழர் தாயகப் பகுதிகளில் வாக்களிப்பு வீதம் படு வீழ்ச்சியடைந்திருப்பதைச் சுட்டிக்காட்டியே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ் மக்களுக்கு எதுவித அறிவுறுத்தலும் விடுக்காத நிலையில் தமிழ் மக்களின் வாக்குகளை நம்பியிருந்த ரணிலின் வெற்றியில் வாக்குவீத வீழ்ச்சி பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பரப்புரை முழுவதும் தமிழ் மக்களின் வாக்குகளை நம்பியதாக இருந்தது. வடக்கு-கிழக்கு வாக்குகள் தமக்குக் கிடைக்கும் என்று நம்பியிருந்தார்.

ஆனால் விடுதலைப் புலிகள் வித்தியாசமான அனுகுமுறையைக் கையாண்டுள்ளனர். அவர்கள் அதை நிரூபித்தும் இருக்கிறார்கள்.

இந்தத் தேர்தல் மூலம் சிங்கள அரசியல் தலைவர்கள் சிங்களத் தலை வர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் இது. ஒன்று தான் என்று கூறியுள்ளார். (ற)

# சிவராம் படுகொலை வழக்கு விசாரணை தொடர்கிறது

## இதுவரை 125 பேரிடம் விசாரணை



(கொழும்பு)

மாமனிதர் ஊடகவியலாளர் சிவராம் படுகொலை தொடர்பான விசாரணையை இன்னமும்தொடருவதாக கொழும்பு குற்றப் பிரிவு பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

சிவராம் படுகொலை தொடர்பாக இதுவரை 125 பேரிடம் விசாரணை நடத்தி உள்ளதாகவும் விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்ற வருவதாகவும் கடுவெல தலைமை நீதிபதி சாம்ப ஜானகி ராஜரட்ணவிடம் குற்றப்பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதாகப் பறிமுதல் செய்யப்பட்ட புளொட் சித்தார்த்தனின் வாகனத்தை விடுவிக்கும் மனுவை சட்டத் தரணிகள் தாக்கல் செய்தனர்.

சிவராம் படுகொலையையடுத்து பறிமுதல் செய்யப்பட்ட இந்த வாகனம் ரூபா 50 இலட்சம் பிணையில் பின்னர் விடுவிக்கப்பட்டது. சிவராம் கொலை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுள்ள சிறிஸ்கந்த ராஜா என்ற பீற்றர் எதிர்வரும் நவம்பர் 20ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு எதிராக வைத்து அடையாளம் தெரியாத குழுவினரால் கடந்த ஏப்ரல் 28ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்டு சிவராம் படுகொலை செய்யப்பட்டார். அவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் "மாமனிதர்" விருது வழங்கி சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# தேர்தலில் பொதுச் சொத்துக்களை அதிகம் பயன்படுத்தியது ஆளும்கட்சியே

## -'ட்ரான்ஸ் பரன்ஸி இன்டர்நஷனல்'

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் கட்சிதான் பொதுச் சொத்துக்களை அதிகம் பயன்படுத்தியதாக "ட்ரான்ஸ் பரன்ஸி இன்டர்நஷனல் நிறுவனம்" தனது விசாரணை அறிக்கையை வெளியிட்டுள்ளது.

பொதுச் சொத்துக்கள் ஆளும் கட்சியினரின் வசமிருப்பதால் அவர்களே அதிகம் அதனைப் பயன்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ் தலம் அவரின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து தொலைபேசி,மின்சாரம், வாடகை போன்றன செலுத்தப்பட்டு வந்துள்ளதுடன் இந்தக் காலப்பகுதியில் ரணிலின் உத்தியோகபூர்வ இல்லம் செய்தியாளர் மாநாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

ஏனைய தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இம்முறை பொதுச் சொத்துக்களை தேர்தல் நடவடிக்கைகளில் பயன்படுத்தியமை குறைவடைந்துள்ளதாகவும் அந்த நிறுவன அறிக்கை தெரிவிக்கின்றது.

பொதுச் சொத்துக்கள் பயன்படுத்தப்படாமலும் அதுகுறித்து தகவல்கள் வெளிவராமல் மறைக்கப்பட்டிருக்கலாம் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது .எதிர்வரும் காலங்களில் தேர்தல்களில் பொதுச் சொத்துக்களை பயன்படுத்துவதைத்தவிர்க்குமாறு அந்த நிறுவனம் உரிய தரப்பினரைக் கேட்டுள்ளது. (ற)

## 63 வாக்குச் சீட்டுக்களுடன் வவுனியாவில் 6 பேர் கைது

வவுனியாவில் 63 வாக்குச் சீட்டுக்களை தம்வசம் வைத்திருந்த 6 பேர் தேர்தல் தினத்தன்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.வெள்ளைநிற டொல்பின் வாகனத்தைச் சோதனையிட்ட பொலிஸார் அந்த வானிலிருந்து 63 வாக்குச சீட்டுக்களை கைப்பற்றியுள்ளதுடன் வாகனத்தில் இருந்த 6 பேரையும் கைதுசெய்துள்ளனர்.கைது செய்யப்பட்டவர்கள் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதேவேளை, கள்ளவாக்குப் போட முயன்ற இருவர் மாத்தளை உடுபிள்ள எனும் இடத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். (ற)

## விழிப்புணர்வுப்போட்டியும் கண்காட்சியும்

பொலித்தீன்,பிளாஸ்ரிக்,நைலோன் போன்ற பொருட்களின் பாவனையின் மூலம் நமது தேசமும் மக்களும் பாதிப்படைவதைப் படிப்படியாகக் குறைப்பதற்கு உடனடி மாற்றீடாகக் கிடைக்கக் கூடியது பன்ன வேலைப் பயிற்சினூடாகக் கிடைக்கும் பொருட்களேயாகும். அந்தவகையில் பன்ன வேலையில் ஈடுபாடுடைய அனைத்துத் தமிழீழ மக்களும் தங்களால் தரமாக உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களில் ஒவ்வொன்றை வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரி பண்ணையில் அமைந்திருக்கும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நடுவப்பணியகத்தில் 21.12.2005 புதன்கிழமைக்கு முன்னர் கையளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். ஒருவர் வித்தியாசமான எத்தனை பொருட்களையும் கையளிக்கலாம்.

ஒவ்வொரு வகையிலும் தரமானதெனத் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பொருட்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படுவதுடன், பரிசில் வழங்கும் வைபவமானது ஒரு கண்காட்சி நிகழ்வினூடே நடைபெறும் என்பதையும் போட்டியாளர்கள் கவனத்தில் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். போட்டியாளர்களுக்கு பொருட்கள் கையளிப்பதில் ஏற்படும் போக்குவரத்துச் செலவை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பொறுப்பேற்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கற்பிட்டியில் வீழ்ந்தது விமானமல்ல 'டொனாடோ' எனும் தீச்சுழல்!

(புத்தளம்)

கற்பிட்டி நுரைச்சோலை கடற்பரப்பில் எரிந்து விழுந்தது விமானம் அல்ல என்றும் டொனாடோ எனும் தீச்சுழலே அந்தக் கடற்பரப்பில் வீழ்ந்ததாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.கற்பிட்டிக் கடற்பரப்பில் கடந்த செவ்வாய்க்கிழமை தீப்பந்தொன்று வந்து விழுந்ததாக இரு மீனவர்கள் தெரிவித்ததையடுத்து ரோலர் படகுகளில் அந்தப் பகுதிக்கு கடற்படையினர் சென்று சோதனைகளை நடத்தினார்கள்.

சம்பவம் நடந்த இடத்தில் எந்தவித எண்ணெய்ப் பசையும் காணப்படவில்லை. விமானமோ அல்லது உலங்குவானூர்த்தியோ விபத்தில் சிக்கியிருந்தால் அந்த இடத்தில் எண்ணெய்ப் பசைத் தன்மை காணப்பட்டிருக்கும் என்று ஸ்ரீலங்கா கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.மேலும் எதுவித விமானமோ உலங்குவானூர்தியோ காணாமல் போகவில்லையெனவும் விமானப்படைத் தளபதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கடற்படையினரும் விமானப்படையினரும் இணைந்து தொடர்ந்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (ற)

# தொகுதி வாரியான முடிவுகள் சில...

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலின தொகுதி வாரியான சில முடிவுகள் வருமாறு,

**மன்னார் தேர்தல் தொகுதி**

மஹிந்த - 2,183 - (9.46%)
ரணில - 20,463- (88.72%)
மொத்த வாக்குகள் - 23,426
செல்லுபடியானவை - 23,065
பதிவு செய்யப்பட்டவை - 78,906

**பதுளை தேர்தல் தொகுதி**

மஹிந்த - 17,494- (47.77%)
ரணில - 18,624- (50.85%)
மொத்த வாக்குகள் - 37,135
செல்லுபடியானவை - 36,623
பதிவு செய்யப்பட்டவை - 48,670

**காலி- எல தேர்தல் தொகுதி**

மஹிந்த - 19,946- (44.81%)
ரணில் - 23,638- (53.11%)
மொத்த வாக்குகள் - 45,296
செல்லுபடியானவை - 44,511
பதிவு செய்யப்பட்டவை - 57,900

**இரத்தினபுரி தேர்தல் தொகுதி**

மஹிந்த - 43,251
ரணில் - 37,253
மொத்த வாக்குகள் - 100,230
செலுத்தப்பட்ட வாக்குகள - 82,292
நிராகரிக்கப்பட்டவை - 720
செல்லுபடியான வாக்குகள- 81,572

**மாத்தளை மாவட்டம் - தம்புள்ளை தேர்தல் தொகுதி**

மஹிந்த - 43,853
ரணில் - 38,692
மொத்த வாக்குகள் - 111,401
செலுத்தப்பட்ட வாக்குகள் - 84,851
நிராகரிக்கப்பட்டவை - 1,073
செல்லுபடியான வாக்குகள- 83,778

**வன்னி- முல்லைத்தீவு தேர்தல் தொகுதி**

மஹிந்த - 510 - (57.24%)
ரணில் - 372 - (41.75%)
மொத்த வாக்குகள் - 902
செல்லுபடியானவை - 891
பதிவு செய்யப்பட்டவை - 66,596

**குருநாகல் - பண்டுவஸ்நுவர தேர்தல் தொகுதி**

மஹிந்த - 26,365
ரணில் - 25,456
மொத்த வாக்குகள் - 67,023
செலுத்தப்படட வாக்குகள - 52,742
நிராகரிக்கப்பட்டவை - 392
செல்லுபடியான வாக்குகள- 52,350

**கேகாலை மாவட்டம் - கரனியஹல தேர்தல் தொகுதி**

மஹிந்த - 22,653
ரணில் - 22,087
மொத்த வாக்குகள் - 58,163
செலுத்தபபட்ட வாக்குகள் - 46,099
நிராகரிக்கப்பட்டவை - 586
செல்லுபடியான வாக்குகள்- 45,573

(ந-7)

## பயிற்சிப் பட்டறை

எதிர்வரும் புதன்கிழமை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கிராம உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப்பட்டறை தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே, அன்றையதினம் 9.00 மணிக்கு இடம்பெறும் இப்பயிற்சிப் பட்டறையில் அனைத்து கிராம உத்தியோகத்தர்களையும் கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி பிரதேச செயலர் ச.சிறினிவாசன் கேட்டுள்ளார். (ந-108)

## மேலும் 100 பேருக்கு நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு

(கொழும்பு)

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜுலை கலவரத்தால் பாதிக்கப்பட்ட மேலும் 100 பேருக்கு நஷ்ட ஈடு வழங்க ஜனாதிபதி செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந் நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகளென சுமார் 11.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ் ஜுலை கலவரத்தால் பாதிக்கப்பட்ட 30 பேருக்கான நஷ்ட ஈட்டுத் தொகையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்கனவே பகிர்ந்தளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## பெண் அஞ்சல் அதிபர் வெட்டிக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுவன்கேணியில் பெண் அஞ்சல் அதிபர் அடையாளம் தெரியாத நபர்களினால் வெட்டிக்கொலை செய்யபபட்டுள்ளார்.

களுவன்கேணி துணை அஞ்சல் அலுவலகத்தில் கடமைபுரிந்த சந்திரா என்று அழைக்கப்படும் வீரபத்திரன் கோமதி (அகவை-38) என்பவரே இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 10 ஆண்டுகளாகக் களுவன்கேணி அஞ்சல் அலுவலகத்தில் கடமை புரிந்து வருகின்றார்.

கடந்த புதன்கிழமை மாலை 5.30 மணியளவில் கடமைகளை முடித்துவிட்டு இவரின் சொந்த ஊரான முறக்கொட்டாஞ்சேனை பிரதேசத்திற்குச் செல்லும் போது இவரை இடைமறிநத்த அடையாளம் தெரியாத நபர்கள் இவரது வாயையும் கைகளையும் கட்டிவிட்டு இவரைக் கடத்திச்சென்று கொடூரமான முறையில் வெட்டிக் கொன்றுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவரது சடலம் களுவன்கேணி காட்டுப் பகுதி ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் காலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ந)

## கோழி விலை வீழ்ச்சி

(ஊர்காவற்றுறை)

தீவகத்தில் கோழி இறைச்சி, முட்டை ஆகியவற்றின் விலை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளது.

பறவைச் காய்ச்சல் நோயே இவ் விலை வீழ்ச்சிக்குக் காரணமென கூறப்படுகின்றது. (அ-72)

# மாவட்ட ரீதியான தேர்தல் முடிவுகள்

(கொழும்பு)

தேர்தல் திணைக்களத்தினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை, மொனறாகல, பொலநறுவை, பதுளை, மட்டக்களப்பு, திருமலை, அனுராதபுரம்,களுத்துறை மற்றும் மாத்தளை மாவட்டங்களின் முடிவுகள் வருமாறு,

**திகாமடுல்ல (அம்பாறை) மாவட்ட.முடிவுகள்**

| வேட்பாளர்கள் | வாக்குகள் | சதவீதம் |
|---|---|---|
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 159,198 | 55.81% |
| மஹிந்த ராஜபக்ஷ (ஐ.ம.சு.மு) | 122,329 | 42.88% |
| ஸ்ரீதுங்க ஜயசூரிய | 1,091 | 0.38% |
| வாக்களிக்கத் தகுதி பெற்றோர் | | 396,453 |
| அளிககப்பட்ட மொத்த வாக்குகள் | | |
| செல்லுபடியான வாக்குகள் | | 285,267 |

**களுத்துறை மாவட்ட முடிவுகள்**

| வேட்பாளர்கள் | வாக்குகள் | சதவீதம் |
|---|---|---|
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 266,043 | 43.20% |
| மஹிந்த ராஜபக்ஷ (ஐ.ம.சு.மு) | 341,693 | 55.48% |
| ஸ்ரீதுங்க ஜயசூரிய | 2,623 | 0.43% |
| வாக்களிக்கத் தகுதி பெற்றோர் | | 764,305 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | | 622,377 |
| செல்லுபடியான வாக்குகள் | | 615,860 |

**அனுராதபுரம் மாவட்ட முடிவுகள்**

| வேட்பாளர்கள் | வாக்குகள் | சதவீதம் |
|---|---|---|
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 182,956 | 43.62% |
| மஹிந்த ராஜபக்ஷ (ஐ.ம.சு.மு) | 231,040 | 55.08% |
| அச்சோள அசோக சுரவீர | 1,448 | 0.35% |
| வாக்களிக்கத் தகுதி பெற்றோர் | | 536,808 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | | 423,997 |
| செல்லுபடியான வாக்குகள் | | 419,434 |

**மட்டக்களப்பு மாவட்ட முடிவுகள்**

| வேட்பாளர்கள் | வாக்குகள் | சதவீதம் |
|---|---|---|
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 121,514 | 79.51% |
| மஹிந்த ராஜபக்ஷ (ஐ.ம.சு.மு) | 28,836 | 18.87% |
| ஸ்ரீதுங்க ஜயசூரிய | 892 | 0.58% |
| வாக்களிக்கத் தகுதி பெற்றோர் | | 318,728 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | | 154,615 |
| செல்லுபடியான வாக்குகள் | | 152,837 |

**திருகோணமலை மாவட்ட முடிவுகள்**

| வேட்பாளர்கள் | வாக்குகள் | சதவீதம் |
|---|---|---|
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 92,178 | 61.33% |
| மஹிந்த ராஜபக்ஷ (ஐ.ம.சு.மு) | 55,669 | 37.04% |
| ஸ்ரீதுங்க ஜயசூரிய | 792 | 0.53% |
| வாக்களிக்கத் தகுதி பெற்றோர் | | 238,755 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | | 152,398 |
| செல்லுபடியான வாக்குகள் | | 150,304 |

**மாத்தளை மாவட்ட முடிவுகள்**

| வேட்பாளர்கள் | வாக்குகள் |
|---|---|
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 125,937 |
| மஹிந்த ராஜபக்ஷ (ஐ.ம.சு.மு) | 120,533 |
| ஸ்ரீதுங்க ஜயசூரிய | 1,212 |
| மொத்தமாக பதிவு செய்யப்பட்டவை | 321,876 |
| செலுத்தப்பட்டவை | 254,405 |
| நிராகரிக்கப்பட்டவை | 3,785 |
| செல்லுபடியானவை | 250,620 |

**பதுளை மாவட்ட முடிவுகள்**

| வேட்பாளர்கள் | வாக்குகள் | சதவீதம் |
|---|---|---|
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 226,582 | 53.11% |
| மஹிந்த ராஜபக்ஷ (ஐ.ம.சு.மு) | 192,734 | 45.18% |
| ஸ்ரீதுங்க ஜயசூரிய | 2,327 | 0.55% |
| வாக்களிக்கத் தகுதி பெற்றோர் | | 533,163 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | | 433,424 |
| செல்லுபடியான வாக்குகள் | | 426,599 |

**பொலநறுவை மாவட்ட முடிவுகள்**

| வேட்பாளர்கள் | வாக்குகள் | சதவீதம் |
|---|---|---|
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 97,142 | 46.25% |
| மஹிந்த ராஜபக்ஷ (ஐ.ம.சு.மு) | 110,499 | 52.61% |
| அச்சோள அசோக சுரவீர | 683 | 0.33% |
| வாக்களிக்கத் தகுதி பெற்றோர் | | 263,609 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | | 212,032 |
| செல்லுபடியான வாக்குகள் | | 210,030 |

**மொனறாகல மாவட்ட முடிவுகள்**

| வேட்பாளர்கள் | வாக்குகள் | சதவீதம் |
|---|---|---|
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 92,244 | 41.65% |
| மஹிந்த ராஜபக்ஷ (ஐ.ம.சு.மு) | 126,094 | 56.94% |
| அச்சோள அசோக சுரவீர | 943 | 0.43% |
| வாக்களிக்கத் தகுதி பெற்றோர் | | 276,109 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | | 224,086 |
| செல்லுபடியான வாக்குகள் | | 221,450 |

**யாழ். மாவட்ட முடிவுகள்**

| வேட்பாளர்கள் | வாக்குகள் | சதவீதம் |
|---|---|---|
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | | |
| மஹிந்த ராஜபக்ஷ (ஐ.ம.சு.மு) | | |
| விக்டர் கெட்டிகொட | | |
| வாக்களிக்கத் தகுதி பெற்றோர் | | |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | | |
| செல்லுபடியான வாக்குகள் | | |

யாழ்.மாவட்ட முடிவுகளில் அஞ்சல் மூல வாக்களிப்பும் அளிக்கப்பட்ட வாக்குகளில் உள்ளடங்கியுள்ளன.

**அம்பாந்தோட்டை மாவட்ட முடிவுகள்**

| வேட்பாளர்கள் | வாக்குகள் | சதவீதம் |
|---|---|---|
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 112,712 | 35.23% |
| மஹிந்த ராஜபக்ஷ (ஐ.ம.சு.மு) | 202,918 | 53.43% |
| அச்சோள அசோக சுரவீர | 1,217 | 0.38% |
| வாக்களிக்கத் தகுதி பெற்றோர் | | 396,583 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | | 322,723 |
| செல்லுபடியான வாக்குகள் | | 319,925 |

(ந)

# யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்

| வாக்கெடுப்புப் பிரிவின் பெயர் | வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை | பதியப்பட்டுள்ள தேருநர்களின் எண்ணிக்கை | வாக்களித்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஊர்காவற்றுறை | 47 | 52,986 | 276 |
| வட்டுக்கோட்டை | 57 | 62,781 | 278 |
| காங்கேசன்துறை | 58 | 67,133 | 90 |
| மானிப்பாய் | 62 | 68,783 | 347 |
| கோப்பாய் | 60 | 63,752 | 390 |
| உடுப்பிட்டி | 53 | 55,499 | 88 |
| பருத்தித்துறை | 43 | 47,188 | 39 |
| சாவகச்சேரி | 51 | 62,022 | 53 |
| நல்லூர் | 53 | 70,251 | 313 |
| யாழ்ப்பாணம் | 45 | 62,089 | 442 |
| கிளிநொச்சி | 95 | 89,454 | 01 |
| மொத்தம் | 624 | 701,938 | 2317 |

# வாக்களிப்பும் பகிஷ்கரிப்பும்


## மன்னார்


பொலிஸ் பாதுகாப்பு


வாக்குச்சாவடியில் தூங்கி வழியும் அதிகாரிகள்


கண்காணிப்பில்....

## மட்டக்களப்பு






வாக்குச்சாவடிப் பாதுகாப்பில்...


வாக்குப்பெட்டிக்கு காவல்

## ஓமந்தை



வெறிச்சோடிக்கிடக்கும் வாக்களிப்பு நிலையம்



வாக்களிப்பிற்கு அழைத்துச் செல்ல தயார் நிலையில் பேரூந்துகள் இருந்தும் வாக்காளர் எவரும் வராததால் தரித்து நிற்கும் பேரூந்துகள்.


வாக்காளர்கள் இல்லாததால் அளவளாவும் உத்தியோகத்தர்கள்.


## கொழும்பு






வாக்குப்பெட்டிகள் வாக்களிப்பு நிறைவில் எடுத்துச்செல்லப்படுகின்றன.


நிட்டம்புவவில் வாக்களிக்கும் ஜனாதிபதி





# வன்முறை முறைகேடு அறிக்கை கிடைத்ததும் அவைகுறித்து உரிய கவனம் செலுத்தப்படும்

## -தேர்தல் ஆணையாளர்

ஜனாதிபதித் தேர்தலில் வரலாற்றிலேயே முதல் முறையாக யாழ்.மாவட்டத்தில் வெறும் 0.014 வீதமான வாக்குகளே பதிவாகி இருப்பதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் நேற்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க கூறியதாவது,

யாழ்.மாவட்டத்தில் மொத்தம் 75 வீதமான வாக்குகள் பதிவாகியுள்ளன. எனினும் இந்த எண்ணிக்கை இறுதியான எண்ணிக்கை என்று கூறமுடியாது. மொத்த வாக்குகளையும் எண்ணி முடித்த பின்னரே வாக்களித்தவர்களின் வீதத்தை அறியத்தர முடியும்.

சிறு சிறு வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ள போதிலும் பொதுவாக அமைதியான முறையிலேயே தேர்தல் நடைபெற்றுள்ளது. கள்ளவாக்குப் போடுதல், வாக்களிப்பு நிலையங்களுக்கு முன்னால் வன்முறைகளை மேற்கொண்டமை, வாக்களிப்பு நிலையங்களில் பிரதிநிதிகள் பிரச்சினைகளை ஏற்படுத்தியமை, அதிகாரிகளுடன் வாக்குவாதங்களில் ஈடுபட்டமை, சட்டவிரோதமாக வாக்களிப்பு நிலையங்களுக்குள் உட்பிரவேசிக்க முயன்றமை ஆகியன தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

வாக்களிப்பு நிலைய பாதுகாப்பு அதிகாரிகள், தெரிவத்தாட்சி அலுவலகர்களிடமிருந்து இந்தச் சம்பவங்கள் பற்றிய முழு அறிக்கை கிடைத்த பின்னர் அது குறித்து கவனம் செலுத்தப்படும்.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் வாக்களிப்பு மிகக்குறைந்த அளவிலேயே இருந்தது. யாழ். மாவட்டத்தில் 0.014 வத வாக்குகளே பதிவாகியுள்ளது. வரலாற்றில் இப்படியான வாக்களிப்பு நிகழ்ந்துள்ளது இதுவே முதல் முறை.

வன்னி மாவட்டத்தில் 10 வீதமான வாக்குகள் பதிவாகியுள்ளன. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்கள் வாக்களிப்பதற்காக போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்திருந்தும் அந்தப் பிரதேச மக்கள் வாக்களிக்கவில்லை.

வவுனியாவில் வாக்களிப்பு நிலையங்களில் ஒரு வாக்குக் கூட வாக்களிக்கப்படவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் அமைதியாக தேர்தலை நடத்துவதற்குத் தேவையான பாதுகாப்பினை வழங்கிய பொலிஸ் மா அதிபருக்கும், தேர்தலுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபருக்கும், ஏனைய பொலிஸ்மா அதிபர்களுக்கும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க நன்றி தெரிவித்துள்ளார்.

மன்னாரில் 27 வீதம் வாக்களிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் மணலாறு சிங்களக்குடியேற்றவாசிகள் வாக்களித்துள்ளனர். மட்டக்களப்பில் 27 வீதம் வாக்குகள் போடப்பட்டுள்ளன. இதில் பெரும்பான்மை வாக்குகள் முஸ்லிம் களுடையவையாகும்.

அம்பாறையில் மொத்தம் 60 வீத வாக்குகள் பதிவாகியுள்ளன. அம்பாறையில் பெரும்பான்மையாக சிங்களவரும், முஸ்லிம்களும் உள்ளதால் இந்த வீத அதிகரிப்பு காணப்படுகின்றது. திருகோணமலையில் 60வீத வாக்களிப்பு நடைபெற்றுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வாக்களிப்போருக்கான போக்குவரத்து ஏற்பாடுகள் செய்திருந்தும் அப்பிரதேச மக்கள் முழுமையாகத் தேர்தலைப் புறக்கணித்துவிட்டனர். வாக்குப் பதிவின் போது மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் 4 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 9 பேர் காயமடைந்துள்ளனர்.



தேர்தல் தினத்தன்று பல வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தேர்தல் வன்முறைக் கண்காணிப்பு நிலையம் அறிவித்துள்ளது. வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் வாக்களிப்பானது மிகவும் குறைந்தளவிலேயே நிகழ்ந்ததாக ஐரோப்பியக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜோன் குன்னஹன் தெரிவித்துளளார். (ற)

## இலக்கிய பெருவிழா

யாழ்.மாவட்ட செயலகம் நடாததும் தேசியகலை இலக்கியப்பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வேம்படி மகளிா கல்லூரியில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாசும், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் மேலதிக அரசாங்க அதிபா திருமதி ப.திலகநாயகம் போல், வடக்கு-கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சுச் செயலாளர் திருமதி க.சிவசிதம்பரம், வேமபடி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி க.பொன்னம்பலம் ஆகியோருமகலந்துகொள்ளவுள்ளனர்.

சிறப்புச் சொற்பொழிவினை பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆற்றவுள்ளார். மாவட்ட மட்டத்தில் நடததப்பட்ட தேசிக கலை இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ-9)

# விமானப்படை நிர்வாக இயக்குநருக்கு உயர் நீதிமன்றம் எச்சரிக்கை விடுப்பு

(கொழும்பு)

சிறிலங்கா விமானப்படையின் நிர்வாக இயக்குநருக்கு உயர் நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

விமானப்படையின் 6 ப்ளைட் லெப்டினன்ட்களுக்கான பதவி உயர்வுகள் அளிக்கப்படாததையடுத்து உயர் நீதிமன்றத்தல் இவர்கள் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தொடர்ந்தனர்.

தங்களுக்கு கீழ்நிலையில் உள்ளோருக்குப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருப்பதாகவும் தங்களுக்குப் பதவி உயர்வு மறுக்கப்பட்டிருப்பதாகவும் இவ் 6 விமானப்படை லெப்டினென்ட்களும் தங்களது மனுவில் தெரிவித்திருந்தனர்.

இந்த வழக்கின் எதிர்த்தரப்பினராக விமானப்படைத் தளபதி ஏா மார்சல் டொனால்ட் பெரேரா, நிர்வாக இயக்குநர் ஏர்வைஸ் மார்சல் அருந்தவநாதன் உள்ளிட்ட 7 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர்.

வாழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் முறைப்பாடு செய்த 6 பேருக்கான பணி இடததை உயர்நிலையில் ஒதுக்கீடு செய்ய உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் வழக்கைத் தொடர்ந்தவர்களில் ஒருவரான விஜயகோன் என்பவரது விடுப்பு மனுவை நிராகரித்த நிர்வாக இயக்குநர், விடுப்புக்காக நீதிமன்றத்தில் வழக்கு தொடருவீர்களா? என்று கேள்வி எழுப்பி விமர்சனம் செய்துள்ளார். பின்னா அவரை மட்டக்களப்பு பிரதேசததுக்கு பணி மாற்றம் செய்தார்.

அருந்தவநாதனின் இந்த செயற்பாடுகளை நீதிமன்றில் விஜயக்கோன் தரப்பில் அவரது சட்டத்தரணிகள் முறைப்பாடு செயதனர். இந்த முறைப்பாட்டை விசாரணை செய்த உயர் நீதிமன்றம் அருந்தவநாதனுக்கு எசசரிக்கை விடுத்ததுடன 6 வாரங்களுக்குள் இந்த வழக்கில் பதில தாக்கல் செய்ய உத்தரவிட்டு வழக்கை அடுத்த ஆண்டு பெப்ரவரி 1ஆம் திகதிக்கு ஒத்திவைததது. (ற)

# பாகிஸ்தானுக்கு தாராளமாக உலக நாடுகள் உதவ வேண்டும்

## -கொபி அனான் வேண்டுகோள்

(இஸ்லாமாபாத்)



கடுமையான பூகம்பப் பாதிப்பில் இருந்து மீள பாகிஸ்தானுக்கு பெருந்தனமையோடு தாராளமாக உதவ அனைவரும் முன்வர வேண்டும். என உலக நாடுகளிடம் ஐ.நா.பொதுச் செயலர் கொபி அனான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாகிஸ்தானின் வடபகுதி மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீா பகுதிகளில் கடந்த அக்டோபர் மாதம் 8ஆம் திகதி மிகப் பெரிய அளவில் பூகம்பம் ஏற்படடது. அதில் 73 ஆயிரம் பேர் பலியாயினர். ஆயிரக்கணக்கானவர்கள் படுகாயம் அடைந்தனர்.

இந்தப் பூகம்பத்தில் 33இலட்சம் பேர் பாதிக்கப்பட்டனர். வீடுகளை இழந்து இமய மலையின் கடுங்குளிர் பகுதிகளல் இவ்வாறு தற்போது நிலவும் கடும் பனியில் இவர்கள் உறைந்துகொண்டுளளனர். இங்கு நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இங்கு முழுமையாக நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ரூ.23 ஆயிரத்து 400 கோடி தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

மீட்புப் பணியில் ஈடுபடடுள்ள சர்வதேச அமைபபுக்களை பாராடடிய பாக், அதிபர் முஷாரப், ‘சர்வதேச நிதி எதிர்பார்த்த அளவுக்குக் கிடைக்கவில்லை என அதிருப்தி தெரிவித்திருந்தார். இதுவரை ஆயிரத்து 350 கோடி ரூபாய மட்டுமே நிவாரண நிதியாக பாகிஸதான் பெற்றுள்ளது.

பாகிஸ்தானில் இன்று நடைபெறவுள்ள சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள நேற்று முன்தினம் பாகிஸதான் தலைநகர் இஸ்லாமாபாத்திற்கு சென்ற ஐ.நா.பொதுச் செயலர் கொபி அனான் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்,

கடுமையான பூகபம்பப் பாதிப்பில் இருந்து பாகிஸ்தான் மீள வேண்டுமனால், உலக நாடுகள் அனைத்தும் பெருந்தன்மையோடு தாராளமாக உதவ முன்வர வேண்டும். பூகம்ப நிவாரணத்திற்கு ஏராளமான உதவிகள் கிடைத்துள்ளன. ஆனால் இன்னும் அதிகமாகத் தேவைப்படுகிறது. நான் உலக நாடுகள் என்று கூறுவது அரசாங்கங்களை மட்டுமல்ல அந்நாடுகளில் உள்ள தனியார் துறைகள் மற்றும் தனியார்கள் உட்பட உதவி செய்யக்கூடிய நிலையில் உள்ள அனைவரும் உதவிகள் வழங்கலாம் என்று கூறினார். (ற)

# சிலி, பொலிவியாவில் நேற்று நிலநடுக்கம் வீடுகள் அதிர்ந்தன; மக்கள் வெளியேற்றம்

(சான்டியாகோ)

தென்அமெரிக்க நாடுகளில் ஒன்று சிலி. இந்த நாட்டின் வடக்கு பகுதியில் நேற்று அதிகாலை திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. காலை 4மணிக்கு ஏற்பட்ட இந்த நில நடுக்கம் ரிக்டர் அளவில் 6 புள்ளிகளாக பதிவானது.

போர்கோபில்லா உள்பட பல்வேறு பகுதிகளில் இந்த நிலநடுககம் உணரப்பட்டது. வீடுகள் மற்றும் இதர கட்டடங்கள் அதிர்ந்தன, வீடுகளில் தூங்கிக கொண்டிருந்தவர்கள் அலறி அடிததுக் கொண்டு வெளியே ஓடினார்கள்.

சிலி நாட்டை ஒட்டியுள்ள பொலிவியாவிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இங்கு 6.9 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவானதாக அங்குள்ள புவியியல்துறை அறிவித்துள்ளது. பல்வேறு நாடுகளில் கட்டடங்கள் அதிர்ந்தன. சில கட்டடங்களில் விரிசல் ஏற்பட்டன.

ஆனால் இதுவரை உயிச் சேதம் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. பொதுமக்கள் வீடுகளுக்குள் செல்லாமல் திறந்த வெளியிலேயே திரண்டு நிற்கிறார்கள்.

சிலி நாட்டின் வடபகுதியில் ஏராளமான சுரங்கங்கள் உள்ளன. இவற்றில் சில சுரங்கங்கள் பூகமபத்தில பாதிக்கப்பட்டன. ஆனால் சுரங்கத் தொழில் பாதிக்கப்படவில்லை என்று அமெரிக்காவை சேர்ந்த சுரங்க அதிபர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ற)

# பிடல் காஸ்ட்ரோ நோயால் அவதி

கியூபா நாட்டின் அதிபர் பிடல காஸ்ட்ரோ பார்கின்சன் நோயால் அவதிப்பட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவரது நிலைமை மோசமாக இருப்பதால், அரசுப் பணிகளை மேற்கொள்ள அவர் மிகவும் சிரமப்படுகிறார் என அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.தெரிவித்துள்ளது.

கியூபா, வட அமெரிக்காவின் அருகில் உள்ள ஒரு தனித்தீவு. இந் நாடு சர்க்கரைக் கிண்ணம் என்று அழைக்கப்படும. இந்நாட்டின் முக்கியபயிர் கரும்பு. ஒருகோடியே 10 இலட்சம் மக்கள் தொகையைக கொண்டது கியூபா. இங்கு கடந்த 1959 ஆம் ஆண்டு ஏற்பட்ட புரட்சிக்குப் பின்னர் பிடல் காஸ்ட்ரோ இந்நாட்டின் அதிபரானார். அன்று முதல் இன்றுவரை கியூபா ஒரு சிறந்த கம்யூனிஸ நாடாகவும் அமெரிககாவுக்கு சிம்ம சொப்பனமாகவும் இருந்து வருகிறது.

அதிபர் பிடல் காஸ்ட்ரோவுக்கு தற்போது வயது 79. கடந்த சில ஆண்டுகளாக பிடல் காஸ்ரோ பார்க்கின்சன் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். அரவது நோய் குறித்து சமீபத்தில் ஆய்வு ஒன்று எடுக்கபபட்டது. அதில் இந்நோயால் அவரது உயிருக்கு ஆபத்து எதுவும் ஏற்படாது. இந்நோய் அவரை பல வீனப்படுத்தி, சோர்வடையச் செய்துவடும். அவரது நோயின் பாதிப் புகள் தற்போது வெளிப்படையாகத் தெரியத் தொடங்கிவிட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.


இதையடுத்து அமெரிக்காவிலுள்ள கொள்கைவாதிகள் கியூபாவின் எதிர்காலம் குறித்து சர்ச்சையை கிளப்பியுள்ளனர். இருப்பினும், அதிபர் பிடல் காஸ்ட்ரோவின் தம்பியும், தற்போது கியூபா இராணுவத்தின் தலைவராகவும் உள்ள ராவுல் அடுத்த அதிபராக வரவாய்ப்புகள் உள்ளதாகக் கூறப்படுகிறது. (ற)



# வாக்களிப்பும் பகிஷ்கரிப்பும்

## முகமாலை






வாக்களிப்பைப் புறக்கணித்து முகமாலைப்பகுதியில் ஒன்று கூடி தமது வாக்குச் சீட்டுக்களைத் தீயிட்டுக் கொளுத்தி எதிர்ப்புத் தெரிவிக்கும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்கள்...


## மலையகத்தில்....




## வவுனதீவில்...




## புத்தளத்தில்...





வெற்றிபெற்ற பின் பௌத்த மத குருக்களிடம் ஆசி பெறும் மஹிந்த.




வெற்றிக்களிப்பில் 60 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் மஹிந்த



தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதும் ஆதரவாளர்களின் அரவணைப்பில் மகிழும் மஹிந்த.



ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ தனது 60ஆவது பிறந்த நாள் கேக் வெட்டுவதையும், தனது அன்புமனைவிக்கு பரிமாறுவதையும் படங்களில் காணலாம்.



# பள்ளிவாசல் மீது கைக்குண்டு வீச்சு அறுவர் பலி; 18 பேர் படுகாயம்

## தமிழ் மக்கள் இடப்பெயர்வு

(அம்பாறை)

அம்பாறை - அக்கரைப்பற்று வீதியில் உள்ள பெரிய பள்ளிவாசல் மீது நேற்றுக் காலை 5.45 மணியளவில் அடையாளம் தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டு வீச்சில் ஆறு பேர் கொல்லப்பட்டதுடன் 15ற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

இக் கைக்குண்டுத் தாக்குதலில் காயமடைந்த மக்கள் மருத்துவக்காவு வண்டிகள் மூலம் அக்கரைப்பற்று மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இத் தாக்குதலையடுத்து அப் பகுதியில் பாரியளவில் பதற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் முல்லீம் பகுதிகளிற்கு அண்மையாகவுள்ள தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, குறித்த பகுதியில் பெருமளவான பொலிஸாரும் சிறப்பு அதிரடிப் படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதலின் மூலம் தமிழ் -முஸ்லிம மக்களிடையே கலவரத்தை ஏற்படுத்தும் நாசகார நோக்குடன் படையினர் இத் தாக்குதலை விடுதலைப்புலிகளே மேற் கொண்டுள்ளனர் என பரப்புரையைச் செய்து வருவதாகத் தெரியவருகிறது. (ற)

## 1965 ற்கு முந்திய பதிவுகள் நீக்கப்படவுள்ளன

(கொழும்பு)

1965ஆம் ஆண்டிற்கு முந்திய காலப பகுதிக்கான க.பொ.த சாதாரணதர, உயர் தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பதிவுகள குறித்த பழைய ஆவணங்கள் பரீட்சைத் திணைக்களத்திலிருந்து நீக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு, அக்காலப் பகுதிக்குரிய பரீட்சைப் பெறுபேறுகளை உறுதிப் படுத்தும் நோக்கோடு பரீட்சைத் திணைக்களம் துரித வேலைத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

1965 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய பெறுபேறு உறுதிப்படுத்தப்பட வேண்டுமானால் உடனடியாக விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற-7)

## பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

வேலணைப் பகுதியில் உள்ள க.பொ.த. மாணவர்களுக்கு பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு இன்றும் நாளையும் வேலணை சேர்.வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலயத்தில், தீவக லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் மற்றும் சமுகக்கல்வி ஆகிய 5 பாடங்களுக்கு பிரபல ஆசிரியர்களால் வழிகாட்டல் வகுப்புகள் நடாத்தப்படவுள்ளன. (அ)

# தேர்தல் வாக்களிப்பு நேரத்தில் கிழக்கில் பரவலான குண்டுத்தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் வாக்களிப்பிற்காக அமைக்கப்பட்ட நிலையங்களிலும், பிற இடங்களிலும் கைக்குண்டுத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதன் போது பலர் காய[illegible]டைந்துள்ளனர்.

மட்டக்க[illegible]பு மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்[illegible]ல் வாக்களிப்பிற்காக அமைக்கப்பட்ட நிலையங்களில் கைக்குண்டுத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதன் போது பலர் காயமடைந்துள்ளனர்.

செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்தில் நண்பகல் 12.10 மணியளவில் வாககுகளை அளித்துவிட்டு திரும்பும்போது இடம்பெற்ற கைக்குண்டு வீச்சில் ஜேர்ச் பண்டார (45), உபுல் பண்டார(29), என்ற 2 பொலிஸாரும் பொது மக்களாகிய பதீர் தம்பி செய்நம்பி உம்மா (55), எ.எச். அப்துல் கபூர் (28) என்ற ஆசிரியரும் அவரது மகனுமான அப்துல் ஜபார் (18) மற்றும் எம்.றோஷான் (14), எல்.நிர்மலா (30), எம்.சுபையிர் (24), ஆர்.பாலேந்திரா (20) ஆகியோரும் கடும் காயங்களுக்குள்ளாகி முதலில் ஏறாவூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்பு அங்கிருந்து மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

பிறிதொரு சம்பவத்தில் கல்முனை பாண்டிருப்பில் அமைந்துள்ள சோமநாதர் வீதியிலிருக்கும் வீடொன்றிற்குள் நண்பகல் 1.15 மணியளவில் வீட்டின் உட்பக்கத்தில் குண்டொன்று வெடித்ததில் கே.நிரோசன் மற்றும் எஸ்.சத்தியன் (26) ஆகியோர் உயிரிழந்துள்ளதாகவும் எஸ்.பிரியா (8), எஸ்.மதுசன் (2), ஆர்.சந்திரன் (38), எஸ்.விதுசியா (9), வி.ரங்கன் (9) ஆகியோர் ஆபத்தான நிலையில் கலமுனை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

பாரிய சத்தத்துடன் இக்குண்டு அவ் வீட்டின் உட்பகுதியிலேயே வெடித்துள்ளதாகவும், வீடு பலத்த சேதத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, நண்பகல் 1.45 மணியளவில் அக்கரைப்பற்று ஆலயடி வேம்புப் பிரதேசத்தில் வாக்களிப்பு நிலையம் அமைந்துள்ள விபுலானந்தா கல்லூரிக்கு முன்புறமாக இடம்பெற்ற கைக்குண்டு வீச்சுச் சம்பவத்தில் பாலப்பேடி சடாச்வரி (56) என்பவர் காலில் காயங்களுக்கு உள்ளான நிலையில் அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மட்டக்களப்பு இந்துக் கல்லூரிக்கு முன்பாக நடைபெற்ற கைக்குண்டு வீச்சில் 2 பொலிஸாரும், 2 ஊர்காவலப் படையினரும் 1 பொது மகனும் காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ற)

# சுதந்திரக் கட்சியை மஹிந்த மறந்து விட்டாரா? -ஐ.தே.க


(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மஹிந்த ராஜபக்ஷ மறந்துவிட்டாரா என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை அலவலகம் இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் வாக்குப் பதிவு நாளில் வெளியிடபபட்ட விளம்பரம் ஒன்றில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் கையெழுத்துப் போடவில்லை. மஹிந்த ராஜபக்ஷவை சுதந்திரக் கட்சி நீண்ட காலத்துக்கு ஆதரிக்காது என்பதற்கு இது உத்தியோகபூர்வமான ஆதாரம்.

மஹிந்த ராஜபக்ஷவை சுதந்திரக் கட்சி ஆதரிக்கவில்லையா? அல்லது சுதந்திரக கட்சியை மஹிந்த ராஜபகஷ மறநதுவிட்டாரா? என்று திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார். (ற)




தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பொது நூலகத்தினால் அண்மையில் மாணவர்கள் மத்தியில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியின் காட்சி. (படம் :சாவ.நிருபர்)

# பெரும்பான்மை மக்களுக்கு கிடைத்த வெற்றியாகும்

## -ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே

(கொழும்பு)

ஜனாபதிபதித தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றமை தொடர்பாக அமைச்சர்கள் பலர் தங்களது கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில், அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டே புள்ளே கருத்து வெளியிடுகையில்,

இது பெரும்பான்மை மக்களுக்குக் கிடைத்த வெற்றி என்றும் ஒற்றையாட்சி முறை தொடர்ந்தும் நிலைபெற விரும்பும் மக்களுக்கான வெற்றி என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் டி.எம்.ஜெயரட்ண இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில்,

நாட்டின் கலாசார பாரம் பரியவர்களுக்கு பெரும் மதிப்பளிக்கும் ஒருவரை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்க மக்கள் தீர்மானித்துள்ளமை இத் தேர்தல் முடிவு கள் மூலம் தெரியவந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.(ற-7)

# வீடமைப்புக் கடனுக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி பிரதேச வீடமைப்பு அதிகார சபையின், அடுத்த வருட வீடமைப்புக் கடன் வழங்கலுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கடனைப் பெற விரும்புபவர்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இதற்கான விண்ணப்பத்தினைப் பெற்று இவ்வருடத்திலேயே அதற்கு விண்ணப்பிக்கலாம் என வீடமைப்பு அதிகார சபை உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

மேலும், இதுவரை 50 ஆயிரம் ரூபா மட்டுமே கடனாக வழங்கப்பட்டு வந்தது. அடுத்த வருடத்தில் இருந்து 65 ஆயிரம் ரூபாவாக இது அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இவ் விண்ணப்பத்தினை பிரதி புதன் கிழமைகளில் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-108)

## குண்டுத்தாக்குதல்களையடுத்து
# ஐரோப்பிய கண்காணிப்பாளர்கள் செங்கலடியிலிருந்து விலகல்

(மட்டக்களப்பு)

கிழக்குப் பிரதேசத்தில் வாழைச்சேனை மற்றும் செங்கலடியில் தேர்தல் கண்காணிப்புப் பணிகளிலிருந்து ஐரோப்பிய கணகாணிப்பாளர்கள் வெளியோறியுள்ளனர்.

வாழைச்சேனை இந்துக் கல்லூரி உள்ளிட்ட இரு இடங்களில் நடந்த குண்டுத் தாக்குதல்களை அடுத்து அச்சமடைந்தே கண்காணிப்பாளர்கள் அங்கிருந்து வெளியேறியதாகத் தெரியவருகிறது.

கண்காணிப்பாளர்களின் பாதுகாப்புக் கருதி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக ஐரோப்பிய கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜோன் குஷ்னகன் தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை இந்துக் கல்லூரி மீதான குண்டுத்தாக்குதல் முறபகல் 11.45 மணியளவில் நடந்தது. இதில் 4 பொதுமக்கள் மற்றும் 2 பொலிஸார் படுகாயமடைந்தனர். 45 நிமிடங்கள் கழித்து செங்கலடியில வாக்களிப்பு நிலையம் மீது மற்றொரு தாக்குதல நடந்தது. இதில் ஒரு பொலிஸார் உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

இதையடுத்தே கண்காணிப்பாளர்கள தங்களது பணிகளிலிருந்து விலகிக்கொண்டதாகத் தெரியவருகிறது. (ற)



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் கல்வியமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட ஆரம்ப கணனிப் பயிற்சி நிலையத்தை இளைப்பாறிய பிரதி அதிபர் என்.குணசீலன் திறந்துவைத்து கணனிச் செயற்பாட்டை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். (படம்: பரு.நிருபர்)

# சம்பா நெல் உற்பத்தியில் அக்கறை

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த பெரும்போக, சிறுபோக வேளாண்மையின் போது பெறப்பட்ட நெல்லைச் சந்தைப்படுத்த முடியாமல் போனதால் இம்முறை சந்தையில் அதிகூடியவிலை போகும் நெல் வர்க்கமான, சம்பா இன நெல்லை விதைப்பதிலேயே இப் பிரதேச மக்கள் அதிக அக்கறை காட்டி வருகின்றார்கள். முல்லைத்தீவு பிரதேசத்தில் சாதாரண இன நெல் வர்க்கங்கள் ஒரு மூடை 700-750ரூபா வரையிலும சம்பா இனம், ஒரு மூடை 1100-1300 ரூபாவரை விற்பனையாவது மட்டு மல்லாமல் உடனடியாகவே சம்பா நெல்லைக் கொள்முதல் செய்ய தனிபபட்டவர்த்தகர்கள் தயாராக இருப்பதனால்சம்பா இன நெல்லை விதைப்பதில் மக்கள் அதிக அக்கறை காட்டிவருகின்றார்கள். (128)

# கால்நடைகளைக் கட்டி வளர்க்கக் கோரிக்கை

காலபோக விவசாய, தோட்டப் பயிர் செய்கையை முன்னிட்டு 31-03-2006வரை கால் நடைகளை கட்டி வளர்க்குமாறு கரம்பொன் விவசாய சம்மேளனம் கேட்டுக் கொண்டுள்ளது.

தவறும் பட்ஷத்தில் தங்கள் கிராம அலுவலர் பிரிவு உத்தரவு வழங்கப்பட்ட பிடிகாரரினால் கால் நடைகள் பிடிக்கப்பட்டு பிடிகூலி பராமரிப்புச் செலவு, பயிர் அழிவு என்பன அறவிடப்படும்.

7 நாட்களுக்குள் உரியவர்கள் தங்கள் ஆடு, மாடு என்பவற்றை மீளப் பெறாவிடின் அவை கிராம அலுவலர் மற்றும் கமநல உத்தியோகத்தர் முன்னிலையில் ஏலத்தில் விற்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-72)

# சோமவன்ச இலண்டன் பயணம்?
## மறுக்கிறார் விமல் வீரவன்ஸ

ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச அமரசிங்க நாட்டைவிட்டு வெளியேறியதாக தனியார் தொலைக்காட்சிகளும் வானொலிகளும் வெளியிட்டுள்ள செய்திகளை அக்கட்சி மறுத்துள்ளது.

இதுவிடயம் தொடர்பில் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச வெளியிட்டுள்ள அறிக்கையில், இத்தகைய பொய்ச் செய்திகளை மக்கள் நம்பவேண்டாம். மக்கள் வாக்களிப்பதை திசை திருப்பவே இதுபோன்ற செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றன. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிச் செய்திக்காக ஜே.வி.பி. காத்துக்கொண்டுள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து வெளி



யேறிய சோமவன்ச அமரசிங்க லண்டனுக்குச் சென்றுவிட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் பொன்விழா கல்விப்போட்டி முடிவுகள்

மாவிட்டபுரத்தில அமைந்துள்ள மாவைபாரதி மறுமலர்ச்சி மனறத்தினதும் மாவை பாரதி சன சமூக நிலையத்தினதும் பொன் விழா கல்விப்போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

நடைபெற்ற 6 போட்டிகளில் பின்வரும் 3 போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் பின்வருமாறு,

### ஆங்கிலப் பேச்சுப்போட்டி

1ஆம் இடம்:- ஜெயமலர் கொண்சன்ரைன் லூட்ஸ் -திருக்குடும்ப கன்னியர்மடம்.

2ஆம் இடம்:- மரின் டிவ்வா மரியதாஸ் - திருக்குடும்ப கன்னியர்மடம்.

3ஆம் இடம்:- பிரான்ஸிஸ் சேவியர் அஸ்ரோனிஸ் - நவாலி சென்பீற்றர் றோ.க.த.

3ஆம் இடம்:- மேரி தெபோரா டொனால்ட் - திருக்குடும்ப கன்னியர்மடம்.

3ஆம் இடம்:- ஜீனா கிறிஸ்ரீனா போல் - திருக்குடும்ப கன்னியர்மடம்.

**பிரிவு-2**

1ஆம் இடம்:- சுஜீபா தவேந்திரன் - மாதகல் சென்யோசெவ் மகா வித்தி.

2ஆம் இடம்:- அபிராமி தெய்வநாதன் - திருக்குடும்ப கன்னியர்மடம்.

3ஆம் இடம்:- சிவகுமார் நிவேத் - மானிப்பாய் மெமோறியல் நவோதயக் கல்லூரி.

4ஆம் இடம்:- நடராசா ராஜ்குமார் - ஹாட்லிக் கல்லூரி.

5ஆம் இடம்:- விசயரத்தினம் நிருபன் - இந்துக்கல்லூரி.

**பிரிவு 3**

1ஆம் இடம்:- அனுசியா மகாதேவன் - உடுவில் மகளிர் கல்லூரி.

2ஆம் இடம்:- சுமங்கலி சிவகுமாரன் - வேம்படி மகளிர் கல்லூரி.

3 ஆம் இடம்:-துஸ்யந்தா அருந்தவராசா இளவாலை கன்னியர்மடம் மகா வித்தி.

**பிரிவு 4**

1ஆம் இடம்:- சாகினி நடராசா - இளவாலை கன்னியர்மடம் மகா வித்தி.

2ஆம் இடம்- ராஜினி முருகையா - சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி.

3 ஆம் இடம்:- சோபனா இராசரத்தினம் - பண்டத்தரிப்பு மகளிா உயர்தரப் பாடசாலை.

### கவிதைப்போட்டி

**பிரிவு 1**

1ஆம் இடம்:- விஜிந்தினி மோகனராசா - மெதடிஸ் பெண்கள் உ.த.பாடசாலை.

2ஆம் இடம்:- சாகினி நடராசா இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்.

3ஆம இடம்:- றோஷ்னி ஜெயராஸ் - சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

**பிரிவு 2**

1ஆம் இடம்:- கதிரவேலு யோகேஸ்வரன் - மெமோறியல் நவோதயாக் கல்லூரி.

2ஆம் இடம்:- நடராசா கண்ணதாஸ் - மத்திய கல்லூரி.

3ஆம் இடம்:- சிவகுமார் சிவரூபன் - சந்திரபுரஸ்கந்தவரோதயா ம.வித்தி.

### தமிழ்ப் பேச்சுப்போட்டி

**பிரிவு 1**

1ஆம் இடம்:- சியாமிளா சற்குணராசா - கோண்டாவில் சி.சி.த.கபாடசாலை.

2ஆம் இடம்:- பாலசிங்கம் கஜானன் - புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.

3ஆம் இடம்:- காமலின் அருள்தாசன் - திருக்குடும்ப கன்னியர் மடம்.

4ஆம் இடம்:- சிவ்குமார் சிவதர்சன் - மத்திய கல்லூரி.

5ஆம் இடம்:- சுகன்யா சகாயநாதன் - திருக்குடும்ப கன்னியர் மடம்.

**பிரிவு 2**

1ஆம் இடம்:- ஆன் பிரவீனா தியடோர் - திருக்குடும்ப கன்னியா மடம்.

2ஆம் இடம்:- தஸ்மினி வரதராஜா - கோணடாவில் இந்து மகா வித்தியாலயம்.

3ஆம் இடம்:- சிவகுமார் நிவேத் - மானிப்பாய் மெமோறியல் நவோதயாக் கல்லூரி.

4ஆம்இடம்:- நடராசா ராஜ்குமார் - ஹாட்லிக் கல்லூரி

5ஆம் இடம்:- கேமதட்சணி சௌந்தரராஜன் விக்னேஸ்வராக் கல்லூரி

**பிரிவு 3**

1ஆம் இடம்:-ஆன்மரீனா தியடோர் வேம்படி மகளிர் கல்லூரி

2 ஆம் இடம்:-சுமங்கலி சிவகுமாரன் வேம்படி மகளிர் கல்லூரி.

3ஆம் இடம்:- தர்சா வரதராஜா கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.

**பிரிவு 4**

1ஆம் இடம்:- சாகினி நடராசா இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்.

2ஆம் இடம்:- தர்மராஜா நிர்மல்ராஜ் - மத்திய கல்லூரி.

3ஆம் இடம்:- நிரோஜா சக்திவேல் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

**பிரிவு 5**

1ஆம் இடம்:- சற்குணராசா நிகேஸ் - யாழ்ப்பாணக் கல்லூரி.

2ஆம் இடம்:- நடராசா கண்ணதாஸ் - மத்திய கல்லூரி.

3ஆம் இடம்:- ரவீந்திரன் சதீஸ் - மத்தியகல்லூரி.

ஏனைய போட்டிகளில் வெற்றி பெற்றோரின் விபரங்கள் நடுவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றதும் பகிரங்கப்படுத்தப்படும். வெற்றி பெற்றோருக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் பொனவிழா மகா நாட்டில் வைத்து வழங்கப்படும். அதற்குரிய திகதி, நேரம், இடம் என்பன பின்னர் பகிரங்கப்படுத்தப்படும என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# இராசி பலன்

19.11.2005
(கார்த்திகை 04, சனிக்கிழமை)
திருதியைமுற்பகல் 7.21 மணிவரை
திருவாதிரைபின்னிரவு 5.18மணிவரை
இராகுகாலம்- 9.09-10.39 மணிவரை
சுபநேரம் - 3.09-4.39 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்

- **மேடம்** காரிய அனுகூலம், போசன சுகம், நல்ல செய்தி, நண்பர்கள் உதவி.
- **இடபம்** உணர்ச்சி வசப்படுதல், முயற்சி தாமதம், பணவிரயம், ஆரோக்கிய குறைவு.
- **மிதுனம்** நண்பர்கள் சந்திப்பு, நல்ல முயற்சி, தெய்வசிந்தை, திடீர் நன்மை.
- **கடகம்** பிரயாணம், காரிய அலைச்சல், உறவினர் சந்திப்பு, சயன சுகக்குறைவு.
- **சிங்கம்** உறவினர்கலந்துரையாடல், எடுத்த காரியம கைகூடும், தொழில்வருமானம், நல்லசெய்தி.
- **கன்னி** கடின முயற்சி, அதிகாரம், நண்பர்கள் உதவி, நல்ல செய்தி.
- **துலாம்** புதிய திட்டமிடல், பிதாசிந்தை, எடுத்த காரியம் தாமதமாகும், கட்டுப்பாடு.
- **விருச்சிகம்** உஷ்ண வியாதி, அமைதிக்குறைவு, பிரயாண பயம், முயற்சி தாமதம்.
- **தனுசு** காரிய அனுகூலம், நல்ல செய்தி, போசன சுகம், களஸ்திர நன்மை.
- **மகரம்** ஆரோக்கியம், பெரியோர் சந்திப்பு, முயற்சி கைகூடும், தொழில் விருத்தி.
- **கும்பம்** வியாபார சிந்தை, ரோக நிலை, காரிய தாமதம், பணக்குறைவு.
- **மீனம்** மாதா சுகம், மனச் சஞ்சலம், காரிய தாமதம், புதிய விடயம்.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

### அக்கரைப்பற்றில்
# சுற்றுக்காவலில் ஈடுபட்டிருந்த அதிரடிப்படை மீது தாக்குதல்

(அக்கரைப்பற்று)

தாமரைக்குளத்திற்கும் தாண்டியடிக்கும் இடையில் உள்ள 215வது மைல் கல் என்னும் இடத் தில் நேற்று முன்தினம் காலை 7.45 மணியளவில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிறப்பு அதிரடிப்படையினர் மீது அவ்விடத்தில் பதுங்கியிருந்த இனந்தெரியாத குழுவினரால் துப்பாக்கிப் பிரயோகம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத்தாக்குதல் காரணமாக எவருக்கும் சேதங்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இச் சம பவத்தைத் தொடர்ந்து மேலதிகமாக அவ்விடத்திற்கு வந்த சிறப்பு அதிரடிப்படையினர் தீவிர சோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். (ற)

# பேச்சுப்போட்டி முடிவுகள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 126ஆவது குரு பூசைத் தினத்தின்சார்பாக யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையால் கடந்த 15ஆம் திகதி நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டி முடிவுகள் வருமாறு.

**மேற்பிரிவு**

1ஆம் இடம்:- தாரணி செல்வராசா - கிளி/ இராமநாதபுரம் மகாவித்தியாலயம்.

2ஆம் இடம்:- சற்குணராசா நிகேஷ் யா/ யாழ்ப்பாணக் கல் லூரி.

3ஆம் இடம்:- லாவண்யா இரத்தினசிங்கம் யா/ அருணோதயக் கல்லூரி.

3ஆம் இடம்:- கலையரசி கணபதிப்பிள்ளை யா/புனித திரேசா மகளிர் கல்லூரி

**மத்தியபிரிவு**

1ஆம் இடம்:- சின்னத்துரை சோபிதன் யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

2ஆம் இடம்:- கிருஷ்ணா கந்தசுவாமி யா/ மகாஜனக்கல்லூரி.

3ஆம் இடம்:- சி.அகிலா யா/சோமஸ்கந்தா கல்லூரி.

**கீழ்ப்பிரிவு**

1ஆம் இடம்:- கோபிகா சேனாதிராஜா யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.

2ஆம் இடம்:- தர்சினி சச்சிதானந்தம் கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம்

3ஆம் இடம்:- குலதீஸ்வரன் சுஜீவன் யா/கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்.

3ஆம் இடம்:- சச்சிதானந்தசிவம் வேனிலன் கிளி/ கிளிநொச்சி இந்துக்கல்லூரி. (அ)

# சோமவன்ஸ அமரசிங்க அவசர இலண்டன் பயணம்?

(கொழும்பு)

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க கடந்த புதன் கிழமை 1-45 மணியளவில் அவசரமாக இலண்டனுக்குப் புறப்பட்டுச்சென்றுள்ளதாக கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கன் ஏயார் லைன்ஸ் யூ.எல்.503 என்ற வானூர்தியில் சோமவன்ஸ இலண்டனுக்கு சென்றது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக தீவிர பரப்புரைகளிலும், இராணுவத்தைக் கலைக்க வேண்டும் என்ற சர்ச்சையையும் கிளப்பிவிட்ட அவர். தேர்தல் நடைபெறுவதற்கு முதல் நாளே நாட்டைவிட்டு அவசரமாக வெளியேறியமை குறித்து பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளன. (ற)

கலாலயா பயிற்சியகம்
இடைநிறுத்தப்பட்டிருந்த புதிய வகுப்புகளுக்கான அனுமதிகள் மீண்டும் வழங்கப்படுகின்றன
மகளிருக்கான துரித 3 மாத காலப் பயிற்சிகள்
கேக் ஐஸிங்
பூ வேலை
உணவு தயாரித்தல்
கை வேலை
கூந்தல் அலங்காரம்
FABRIC வர்ணமிடல்
FACIAL, மணப்பெண் அலங்காரம்
இத்துடன் 6 மாதகால தையல் பயிற்சிக்கும் அனுமதிகள் உண்டு
மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப 2.30 மணிவரை நேரில் அறிந்துகொள்ளலாம்.
-பதிவாளர்

ஒரு மனிதனின் உண்மையான தன்மையை அறியவேண்டுமானால் அவன் கையில் கூடிய அதிகாரத்தைக் கொடுத்துப்பார்க்கவேண்டும்.
- இங்கர்சால்

வலம்புரி

## மகிந்தவின் வெற்றியும் ரணிலின் தோல்வியும்

நாட்டின் ஐந்தாவது ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் மிகக் கடுமையான போட்டி நடைபெற்றது.

இருவரில் யார் வெற்றிபெறுவார்கள் என்பதை வாக்குகள் எண்ணப்பட்ட இறுதி நேரத்திலேயே தீர்மானிக்கமுடிந்தது. அந்தளவிற்கு இருவருக்கும் இடையிலான போட்டி மிகக் கடுமையாக இருந்துள்ளது.

"மகிந்தவின் சிந்தனை" என்ற புதிய வடிவத்திலான தேர்தல் விஞ்ஞாபனத்தின் முனைப்பு மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதற்கு உதவியதெனலாம்.

அதேவேளை ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் தேர்தல் பகிஷ்கரிப்பும், ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான நவீன் திஸநாயக்க, மிலிந்த மொறகொட ஆகியோரின் பிரசார உரைகளும் தகர்த்தெறிந்துவிட்டதெனலாம்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் எதிர்ப்பு இருந்த போதிலும் அதனை அவர் கனகச்சிதமாக கையாண்டார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, வெளிவிவகார அமைச்சர் அனுர பண்டாரநாயக்க ஆகியோரும் வாக்குச்சாவடிக்குச் சென்று வாக்களித்தனர். அவர்களின் வாக்களிப்பு மகிந்தவின் வெற்றிக்கு உதவியதென்றே கூற வேண்டும்.

அதாவது ஜனாதிபதி சந்திரிகாவின் ஆதரவாளர்கள் மகிந்தவுக்கு எதிராக வாக்களிக்கும் எண்ணத்தில் இருந்திருந்தாலும் ஜனாதிபதி சந்திரிகா வாக்குச்சாவ்டிக்குச் சென்று வாக்களித்ததன் காரணமாக அவரின் ஆதரவாளர்களும் மகிந்தவுக்கு வாக்களிப்பதால் திடீர் உற்சாகம் பெற்றனர். இதுவும் மகிந்தவின் வெற்றிக்கு வழிசமைத்ததெனலாம்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க தனது கட்சிக்குள் தனக்கு இருக்கக்கூடிய எதிர்ப்பினை இனங்காணத் தவறிவிட்டார். விடுதலைப் புலிகளிடம் இருந்து கருணாவைப் பிரித்தது ரணிலேயென நவீன் திஸநாயக்க உரையாற்றினார் எனில் அது ரணிலின் அரசியல் இயலாமையின் வெளிப்பாடேயன்றி வேறெதுவுமில்லை எனலாம்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரத்தில் உரையாற்றும் ஒருவர் எத்துணைதூரம் நிதானமாக பேசவேண்டும் என்ற அறிவுறுத்தல்கள் ரணிலின் கவனத்தில் இல்லாமல் போனமையும் அவரின் வெற்றிக்குப் பங்கமாகியது.

எதுவாயினும் அரசியலில் நிதானமாக முடிவெடுக்கும் தலைமைத்துவப் பண்பு இல்லாதிருப்பின் அவற்றின் பின் தொடர் தோல்வியாகவே இருக்கும்.

# ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவர் 14 நாட்களுக்குள் பதவியேற்க வேண்டும்

## -அமைச்சர் டி.யூ.குணசேகர

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவர் அரசியலமைப்புச் சட்டத்தின படி 14 நாட்களுக்குள் தனது பதவியை ஏற்க வேண்டும.

அதுவரை தற்போதைய ஜனாதிபதி பதவியில் இருக்கலாம் என்று அரசியல் அமைப்பு அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவரே பதவியேற்பிற்குரிய நாளைத் தெரிவு செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமை தாங்கும் இறுதி அமைச்சரவைக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்தது. இருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணங்களினால் அவ் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறவில்லை.

இக்கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெறக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்ட போதும் இக்கூட்டம் தொடர்பில் உறுதிப்படுத்த முடியவில்லை. (ற)

# தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்கு அரச சொத்துக்களை ஆளும் தரப்பே அதிகம் பயன்படுத்தியது -பவ்ரல்

(கொழும்பு)

கொழும்பு மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்கு அரச சொத்துக்கள் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக பவ்ரல் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

கடந்த 15 ஆண்டுகளில் ஸ்ரீலங்காவின் தேர்தல்களில் இந்த முறையே தேர்தல் வன்முறைகள் குறைந்தளவு இடம் பெற்றுள்ளதாகவும், அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பு தேசிய நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்தக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன:இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி ரொட்றிகோ,

கடந்த பல தேர்தல்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இம்முறை குறைந்தளவு வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இது ஸ்ரீலங்காவில் மக்கள் தெளிவாக உள்ளமையையே எடுத்துக்காட்டுகின்றது. கேகாலையிலும், மொனராகலையிலும் மட்டுமே குறிப்பிட்டளவு வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் அனைத்துத் தரப்பினருமே சுமுகமாக நடந்துகொள்ள முயற்சித்துள்ளனர். அதேவேளை, அஞ்சல் சேவை ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக ஐந்து இலட்சம் வாக்காளர் அட்டைகள் உரியவர்களுக்குச் சென்றடையவில்லை என்றும குறிப்பிட்டுள்ளார். (ற)

## வடக்குக் கிழக்கில் தேர்தல் புறக்கணிப்பு தேர்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது

### -பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் இம்முறை ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு சுமுகமான முறையில் நடைபெற்றதாக தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டாளரான பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

அண்மைய காலப்பகுதியில் மிகக் குறைந்த அளவிலான வன்முறைகள் இடம்பெற்ற தேர்தல் இதுவே என பவ்ரல் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வாக்களிப்பு வீதம் முழுமையாக வீழ்ச்சியடைந்தமை தேர்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதாக பவ்ரல் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

மேலும் வடக்கு-கிழக்குப் பகுதிகளை நோக்கும் போது வாக்காளர்களை வாக்களிப்பதிலிருந்து விலகியிருக்குமாறு வலியுறுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. (ற-9)

## சூட்டுக்காயங்களுடன் இருசடலங்கள் நேற்று வாழைச்சேனையில் மீட்பு

(வாழைச்சேனை)

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனையில் கைகள், கண்கள் கட்டப்பட்ட நிலையில் அதிகாலை 2 சடலங்களை பொலிஸார் பேருந்து நிலையம் அருகில் கண்டெடுத்துள்ளனர்.

வாழைச்சேனை பேருந்து நிலையத்திற்கு முன்பாகவுள்ள பேருந்து தரிப்பிற்குள் இருந்து இந்தச் சடலங்கள் இரண்டும் கண்டெடுக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.இச் சடலங்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

இப் பிரதேசத்தில் இந்த வாரத்தில் மட்டும் இதுவரை 5 பேர் இப்படி சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 4 பேரின் சடலங்கள் கைகள், கண்கள் கட்டப்பட்ட நிலையில் வீதிகளல் போடப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (ற)

## தொடரும் பகிஷ்கரிப்புப் போராட்டம

மரக்கறிகளை திருநெல்வேலி செங்குந்தா சந்தைகளில் விற்பனை செய்வதற்கு வரி அறவிடப்படுவதை ஆட்சேபித்து கடந்த செவ்வாய்க்கிழமை அச் சந்தைகளின் மரக்கறி வியாபாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது.

நேற்றுமுன்தினம் கரிநாளாகவும், கடையடைப்புப் பகிஷ்கரிப்பு நாளாகவும் அனுஷ்டிக்கப்பட்டதால் நல்லூர் செங்குந்தா சந்தை இயங்கவில்லையெனினும் மீன் வியாபாரிகள் பக்கத்து ஒழுங்கையில் தமது விற்பனையை நடாத்திய போதிலும்,ஒரு மரக்கறி வியாபாரி கூட வியாபாரத்தில் ஈடுபடவில்லை. இதனால் மரக்கறி வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (து)



கரவெட்டி அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திசபையால் நடாத்தப்பட்ட கொடிவாரத்தை கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், யாழ். மாவட்ட பிரதி சுகாதாரப் பணிப்பாளர் ஆர். கேதீஸ்வரன் மேற்படி அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி எஸ்.யோகேஸ்வரதேவருக்கு முதலாவது கொடியை அணிவிப்பதையும், இக் கொடிவார விழாவில் யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஷ் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மருதங்கேணி செய்தியாளர்.)

## தப்பியோடிய இராணுவத்தினரில் இருவர் கைது

(குருநாகல்)

குருநாகல் இராணுவ தடுப்பு முகாமிலிருந்து தப்பிச் சென்ற இராணுவ சந்தேக நபர்களில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் விதாரண தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இராணுவ தடுப்பு முகாமிலிருந்து 14 சந்தேகநபர்கள் பாதுகாப்பு அதிகாரிகளை தாக்கிவிட்டு தப்பிச்சென்றனர்.

இவர்களில் இருவரையே நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். ஏனைய 12 பேரையும் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் விதாரண மேலும் தெரிவித்துள்ளார். (ச-8)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



உங்கள் உடலுக்குப் பின்னால் எவ்வளவு சக்தி, எத்தனை ஆற்றல்கள், வேகங்கள் எல்லாம் மறைந்துள்ளன என்பது உங்களுக்குத் தெரியுமா? உங்கள் ஆற்றலின் மிகச் சிறிய பகுதியையே நீங்கள் அறிந்துள்ளீர்கள். எல்லையற்ற ஆற்றலும் நல்வாழ்த்துக்களும் உங்களுள் கடல் போலுள்ளது.

சுவாமி விவேகானந்தர்

## காணாமல் போன ஏறாவூர் முஸ்லிம்கள் வாழைச்சேனையில் சடலமாக மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை துப்பாக்கிச்சூட்டுக்காயங்களுடன் இரண்டு சடலங்களை பொலிஸார் கண்டெடுத்தனர்.

இச் சடலங்கள் ஏறாவூர் பிரதேச மக்களுடையது என பதில் நீதிபதி விநோபா இந்திரன் முன்னிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

சடலங்களாக மீட்கப்பட்டவர்கள் சின்னலெப்பை கபீப்மொகமட் (வயது 34), மீராசாகிபு காலித் (வயது 32) ஆகியோர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஊர்காவற் படை வீரரான சின்னலெப்பை கபீப் மொகமட் கடந்த ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி ஏறாவூர் ஆற்றங்கரைக்கு மீன்வாங்கச் சென்றபோது இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டவர் என்றும் மத்திய கிழக்கிற்கு ஆட்களை அனுப்பும் மீரா சாகிபு காலித் கடந்த மாதம் 23 ஆம் திகதி தனது வீட்டிற்கு வந்த தொலை பேசிஅழைப்பினை அடுத்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு விடயம் தொடர்பாக கொம்மாந்துறைக்கு சென்றபோது காணாமல் போயிருந்தவர் என்றும் வாழைச் சேனைப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-4)

## சினைப்பர் இனங்காணப்பட்டது

(கொழும்பு)

சிலாபம் மாரவிலப் பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட சினைப்பர் ரகத்துப்பாக்கியே லக்ஷ்மன் கதிர்காமரின் கொலைக்கு பயன்படுத்தப்பட்டதென அரச இரசாயன பகுப்பாய்வாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாதம் இந்த துப்பாக்கி பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டது.அத்துடன் கைகுண்டுகளுடன் 2 மைக்ரோரக பிஸ்டல்களும் இந்த சினைப்பருடன் கண்டுபிடிக்கப் பட்டது குறிப்பிடத் தக்கது. (ச)

## பதவியில் இருந்து ஓய்வு பெற உதவுமாறு தேர்தல் ஆணையாளர் வேண்டுகோள்



(கொழும்பு)

தேர்தல் ஆணையாளர் பதவியில் இருந்து தன்னை விடுவிக்குமாறு தேர்தல் ஆணையாளர் தயாணந்த திஸாநாயக்க புதிய ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷவைக் கேட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் முகமாக தேர்தல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட வைபவத்திலேயே அவர் இவ்வேண்டுகோளைவிடுத்துள்ளார்.

தேர்தலை நடத்துவதற்கு சகல விதத்திலும் உதவிய அனைத்து அரச ஊழியர்களுக்கும் அரச நிறுவனங்களுக்கும் அவர் நன்றியைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கில்நிலவும்நிலைமையினை கருத்திற் கொண்டு விசேட ஏற்பாடுகளுடன் அங்கு தேர்தல் நடத்தப்பட்டது. அரச நிர்வாகமே சரிவர இயங்குவதில் பிரச்சினையினை எதிர்கொள்ளும் வடக்கு-கிழக்கில் தேர்தலை சரிவர நடாத்த முடியாமை யதார்த்தமானது என்றார்.

இதேவேளை தான் சேவைக்கு மேலதிகமாக 4 வருடங்கள் சேவையில் இருக்க நிர்ப்பந்திக்கப் பட்டதாகவும் இனிமேலாவது தன்னை ஓய்வுபெற அனுமதிக்குமாறு அவர் புதிய ஜனாதிபதியை கேட்டுக் கொண்டார். (ச-4)

## பிரதமர் மகிந்த...

ஆகிய 11 மாவட்டங்களில் மொத்தம் 48 இலட்சத்து 80 ஆயிரத்து 950 வாக்குகளை மகிந்த ராஜபக்ஷ பெற்றுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க கண்டி, மாத்தளை, புத்தளம், யாழ்ப்பாணம், திருகோணமலை, வன்னி, கொழும்பு, மட்டக்களப்பு, திகாமடுல்ல, நுவரெலியா ,பதுளை மாவட்டங்களில் 46 இலட்சத்து 94 ஆயிரத்து 623 வாக்குகளை பெற்றுள்ளார்.

நேற்று நடைபெற்ற தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் நிகழ்வில் அரசியல் கட்சித்தலைவர்கள் கலந்து கொண்டு புதிய ஜனாதிபதிக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

இந் நிகழ்வில் அமைச்சர்களான சுசில்பிறேம ஜெயந்த ,டி.எம்.ஜெயரட்ண ,நிமால் சிறிபால டி சில்வா , மைத்திரிபால சிறிசேன ,தினேஸ் குணவர்த்தன,டளஸ்தேவனந்தா, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, ஜே.வி.பி.யின் பிரசார செயலர் விமல் வீரவன்ச ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதையடுத்து புதிய பிரதமரை தெரிவு செய்வதற்கு போட்டி நிலவுவதாக அரசியல் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-4.7)

## கொக்குவில் பகுதியிலுள்ள வீடுகள்மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் புகையிரதநிலைய வீதியில் உள்ள வைரமுத்து வீரசிங்கம் என்பவரது வீடு இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு குறிப்பிட்ட வீட்டினுள் நுழைந்த சிலர் அங்கிருந்த தொலைக்காட்சிப் பெட்டி, வீட்டுத் தளபாடங்கள் மற்றும் பெறுமதியான பொருட்கள் அடித்து சேதமாக்கப்பட்டுள்ளன.

அதனைத்தடுக்க முற்பட்ட வைவீர சிங்கமும் தாக்குதலுக்கு உள்ளாகிபடுகாயமடைந்துள்ளார். இதே வேளை கொக்குவில் செம்பியன் வேளியிலுள்ள யாழ்.செயலக முன்னாள் மேலதிக அரச அதிபர்.து.வைத்திலிங்கத்தின் வீடும் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத சிலர் இத் தாக்குதலில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க கொக்குவில் கருவேலடி ஒழுங்கையில் உள்ள வீடொன்றும் தாக்கப்பட்டுள்ளது. (ச,அ)

## அனுசரணையாளராக செயற்பட நோர்வே அரசு விருப்பம் தெரிவிப்பு

இலங்கை அமைதி முயற்சிகளில் தொடர்ந்தும் ஈடுபடவிரும்புவதாக நோர்வே தெரிவித்துள்ளது. புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிய வாழ்த்து செய்தியில் நோர்வே இதனை தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியை நோர்வே வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட மகிந்தராஜபக்ஷவுக்கு நோர்வே அபிவிருத்தியமைச்சர் எரிக்சொல் ஹெய்ம் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அமைதி முயற்சிகளுக்கான முன்னெடுப்புக்கள் உள்ளிட்ட விடயங்களில் இலங்கை அரசுடன் இணைந்து செயல்பட நோர்வே விரும்புகிறது என்று தனது செய்தியில் எரிக்சொல்ஹெய்ம் வெளியிட்டுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக மகிந்தவுக்கு மக்கள் வாக்களித்துள்ளதாக சுட்டிக் காட்டியுள்ள எரிக்சொல் ஹெய்ம் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை காப்பாற்றவும் விடுதலைப்புலிகளுடனான அமைதிப் பேச்சுக்களை முன்னெடுக்கவும் சர்வதேச சமூகம் உறுதியாக ஒத்துழைப்பு வழங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினையின் இருதரப்பினரும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அனுசரணையாளர் பணியை மேற்கொண்டு வரும் நோர்வே தொடர்ந்து இனப்பிரச் சினையில் குறிப்பிடத்தக்க வகை யில் செயல்பட உறுதியளிப்பதாகவும் அச்செய்தியில் எரிக்சொல் ஹெய்ம் கூறியதாக வெளிவிவ கார அமைச்சின் செய்திக்குறிப்பு கூறுகிறது. (ச)

## ரணிலை விலக்க முடிவு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தோல்வி கண்டதை அடுத்து அவரை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து விலக்க கட்சிக்குள் முடிவு செய்யப்பட்டுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஐ.தே.கட்சியை மீளக்கட்டியெழுப்புவதற்கு ரணில் பொருத்தமற்ற தலைமையாக கருதப்படுவதால் அவரை கட்சியின் தலைமையில் இருந்து நீக்க வேண்டுமென்ற கருத்து கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மத்தியில் எழுந்துள்ளதாக கூறப்படுகிறது. (ந)

## விடுதலைப்புலிகளுடன்...

இச்சந்தர்ப்பத்தில் எமது மக்கள் வெற்றியை அமைதியான முறையில் கொண்டாடவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் கௌரவமானதும், முக்கியமானதுமான இச்சந்தர்ப்பத்தில் மாற்றுக் கருத்துடைய எவருக்கு எதிராகவும் வாய்மூலமோ வேறு எந்த விதத்திலோ இடையூறுகள் ஏற்படாத வண்ணம் செயல் படுமாறு எனக்கு வாக்களித்த அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறே சட்டத்தினையும், சமூகத்தினையும் இயல்பாகப் பாது காக்கும் பொருட்டு அனைத்து அதிகாரிகளும் நடவடிக்கை எடுப்பார்கள் என எதிர்பார்க்கின்றேன் என் றார்.

மகிந்தவின் சிந்தனை எனும் கொள்கைத்திட்டத்தினை ஜனாதிபதித் தேர்தலில் நாம் முன்வைத்தோம். அது நாட்டினைப் பாதுகாக்க முன்வந்துள்ள மக்களின் வேலைத் திட்டமாகும்.

இவ்வேலைத் திட்டத்தில் உள்ள கொள்கைகளையே எமது அரசாங்கம் எதிர்காலத்தில் அமுல்படுத்தவுள்ளது என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகின்றேன் என்றார்.

ஜனாதிபதித் பதவியினையும், அரசியல் அதிகாரத்தையும் வரப்பிரசாதமாக நான் கருதுவதில்லை. நாட்டின் பெரும்பான்மை மக்கள் எனக்கு வழங்கியுள்ள தற்காலிக பொறுப்புபெனவே கருதுகின்றேன்.

எனது இலட்சியங்களை எய்துவதற்கு மக்கள் ஆகக் கூடுதலான ஒத்துழைப்பினை வழங்கவேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்.(ச-4)

## பொலிஸ் சார்ஜன்ட்...

இதன்போது பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் கிங்ஸ்லி விக்கிரமசிங்க (வயது 40) என்பவரே காயமடைந்தவராவார். வயிற்றிலும் கையிலும் காயமடைந்த அவர் உடனடியாக மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தினை அடுத்து இரு பெண்கள் உட்பட எட்டுப் பேர் கைதுசெய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். கடைகள் அனைத்தும் இழுத்துமூடப்பட்டன. சிறிதுநேரம் அப்பகுதி எங்கும் பதற்ற நிலை காணப்பட்டது.இதேவேளை நேற்று மதியம் முதல் மாலுசந்தி ஊடாகச்செல்லும் வாகனங்கள் பொலிஸாரால் மறிக்கப்பட்டு தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. (ச-52,35,101,43)

## மாவீரர் தின உரையில் புலிகளின் நிலைப்பாடு

(கிளிநொச்சி)

ஜனாதிபதி தேர்தல் குறித்த விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரையில் தெரிவிக்கப்படும் என விடுதலைப்புலிகளின் ஊடகப்பேச்சாளர் தயா மாஸ்ரர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளமை மற்றும் தமிழ் மக்கள் வாக்களிப்பைப் புறக்கணித்தமை என்பன குறித்து கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து தற்போது எதுவும் கூறமுடியாது எனவும் மாவீரர் தின உரையில் தலைவர் வே.பிரபாகரனின் உரையின் மூலம் விரிவாக விளக்கமளிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (ச)

## புதிய ஜனாதிபதி...

யாழ்ப்பாணம், வன்னி, கிழக்கின் சில பகுதிகளில் வாக்களிப்பதற்கு வாக்காளர்கள் ஆர்வமாக இருந்த போதிலும் அவர்களுக்கு வாக்களிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. சிதறடித்த ஆணையைக் கொடுத்த இத் தேர்தல் முடிவானது விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளுக்குப் பின்னடைவினை ஏற்படுத்தக் கூடும்.

பொருளாதாரம் மற்றும் விஷம்போல்ஏறும் எண்ணெய் விலை இவ் இரண்டு விடயங்களிலும் சரியானதோர் வரவை எம்மால் காணமுடியவில்லை. அத்துடன் இன்னும் சில நாட்களில் விடுத லைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் நாள் உரையும் இடம் பெறவிருக்கிறது.

இதில் என்ன நிலைப்பாடு வெளிப்படுத்தப்படுமென தற்போதைக்குத் தெரியாது. ஆகவே எதிர்காலம் பல கேள்விக்குறிகளைக்கொண்ட நிச்சயமில்லாத தன்மையே காணப்படு கிறது.

எனினும் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள பிரதமர் மகிந்த தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை ஏற்றுக்கொண்டு அழைப்பு விடுத்தால் சமாதான செயற்பாடுகளை முன்னெ டுத்துச் செல்ல ஒத்துழைப்பு வழங்கத் தயாரெனத் தெரிவித்தார். (ச-4)

புதிய கல்வி ஆண்டுக்கான புதிய அனுமதிகள்
நவ. 20 - டிச. 10 வரை மட்டுமே வழங்கப்படும்
THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS
தரம் 03 முதல் O/L வரை
புதிய வகுப்புக்கள் எதிர்வரும் டிசம்பரில் ஆரம்பமாகின்றன
The Express Institute Irupalai, Kopay.
அதிபர்
(அ-1832)

மனோகரா யாழ்.
யாழ். நகரில் முதன்முறையாக
DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்

இளைய தளபதி விஜய் வெடிக்கும் சிவகாசி
விஜய் + அசின்
கா.நேரம் 10.30, 2.30 6.30, 9.30(பு.நே)
சில தினங்களில் மட்டும் மாலை 8.30 காட்சி காண்பிக்கப்படும்

ராஜா தியேட்டர் யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
தனுஷ், பிரியாமணி மற்றும் பலர் நடித்த
பாலுமகேந்திராவின் கதை, வசனத்தில் இளையராஜாவின் இசையில்
அது ஒரு கனாக்காலம்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
14.11.2005-20.11.2005 வரை
இரவுக் காட்சிகள் காண்பிக்கப்பட மாட்டாது
17.11.2005,18.11.2005
படக்காட்சி காண்பிக்கப்பட மாட்டாது

நிறைஞ்சனாஸ் சங்கானை
சிவாஜி, ரஜனி, ஜெய்சங்கர், அம்பிகா நடித்த

படிக்காதவன்
கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.